Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 11 (19.07.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:292

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

# தமிழர் உரிமைகளைக் காக்க விடுதலைப் போரே ஒரே வழி!

## யாழ். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்து



யாழ்ப்பாணம் —

சமாதான முயற்சிகளின் மூலமும் - அகிம்சைப் போராட்டங்களின் மூலமும் தமிழர் தேசிய இனத்தின் உரிமைகளை சிங்கள தேசத்திடமிருந்து பெறமுடியாதென்பதை உணர்ந்துள்ள நிலையில் -

தமிழர் தேசத்தை மீட்கும் உரிமைப்போரைத் தொடங்க தமிழீழத் தேசியத் தலைவர் உத்தர விட வேண்டும் என்று யாழ். குடாநாட்டு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், துறைசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். (12 ஆம் பக்கம் பார்க்க)



## புதிய அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு!

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகாவால் நேற்று ஐந்து அமைச்சர்களும், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஒருவரும், ஆறு பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

நீர்ப்பாசன, மகாவலி, ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சராக மைத்திரிபால சிறிசேனவும் - மீன்பிடி, நீரியல்வள, கிறிஸ்தவ விவகார அமைச்சராக மில்றோய் பெர்னாண்டோவும் -

காணி, சுதேச வைத்தியத்துறை அமைச்சராக திஸ்ஸ காரியத்தவும் - சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சராக எஸ்.வி.நாவின்னவும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## போரை தொடங்க ஆணையிடுமாறு வடமராட்சி கிழக்கு மக்கள் பேரணி!

பருத்தித்துறை —

அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், தேசியத் தலைவரை தமிழ்த்தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிக்கக் கோரியும் - வடமராட்சி கிழக்கில் போர்எழுச்சிக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.

இந்தப் பேரணி மருந்தங்கேணி சந்தியில் இருந்து நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமாகி, தாளையடி பொது விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது.

மருதங்கேணி சந்தியிலிருந்து போரா, சமாதானமா? சமாதானம் வேண்டாம். போருக்கு ஆணையிடுங்கள் தலைவரே என்று எழுதப்பட்ட பாரிய பதாகைகளைத் தாங்கிச்செல்ல - அதன் பின்னால் பாடசாலை மாணவர்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் தாளையடி பொது விளையாட்டு மைதானத்தை நோக்கி (12 ஆம் பக்கம் பார்க்க)

## வேம்படிச் சந்திக்கு அருகே புதிய காவலரண் அமைப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ் வேம்படிச் சந்திப்பகுதியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்திற்கு அருகில் இராணுவத்தினரால் நேற்று புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் சுதந்திரக்கட்சி அலுவலகத்திற்கு - இரு இராணுவத்தினரே கடந்த பல வருடங்களாக பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

ஆனால் கடந்த சில வாரங்களாக மேலதிகமாக அங்கு மூன்று இராணுவத்தினர் கடைமையில் ஈடுபட்டு வந்தனர் இவர்கள் நேற்று மதியம் யாழ் சுதந்திரக்கட்சி அலுவலகத்திற்கு இடது புறமாக 10 அடி தொலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு மனுவும்

## ராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள்

## காரைநகர் வாசி

## மற்றொரு மனுவும் உயர்நீதிமன்றில் தாக்கல்!

கொழும்பு —

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மற்றுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படாததால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக அக்கரைப்பற்றைச் சேர்ந்த இப்ராகிம் லெப்பை, கல்முனை வாசியான முகமட் இப்ராகிம் ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் கிழக்கில் நடமாடுவதற்குக் கட்டுப்பாடு!

## பாதுகாப்புக் கருதி இராணுவத் தளபதி உத்தரவு

கொழும்பு —

கிழக்கு மாகாணத்தில் இராணுவ, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரை வெளியில் எங்கும் நடமாடாமல், முகாம்களிலேயே தங்கியிருக்குமாறு உயர் மட்ட உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த பொலிஸாருக்கும், இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கும் இத்தகைய உத்தரவுகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவ, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரை இலக்குவைத்து கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இறுதியாக - கல்முனையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் வாசி கொழும்பில் கைது!

கொழும்பு —

கொழும்பு - பம்பலப்பிட்டியவிலுள்ள புளொட் அலுவலகத்துக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் எனத் தெரிவித்து நேற்று முன்தினமிரவு காரைநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

29 வயதுடைய சுப்பிரமணியம் செந்தில்நாதன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

# படையினரின் கெடுபிடிகளால் மக்கள் மத்தியில் போர்ப் பீதி!

## கண்காணிப்புக்குழுவிடம் ஞானம் முறைப்பாடு

வவுனியா—

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - முக்கிய இடங்களில் படையினர் குவிக்கப்பட்டு, கனரக வாகனங்களில் நடமாட்டமும் படையினரின் சோதனை நடவடிக் கைகளும் அதிகரிக்கப்பட்டிருப்பதால், மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் தோன்றியிருப்பதாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கவனத்துக்கு விடுதலைப் புலிகள் கொண்டுவந்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வந்தாறுமூலையில் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். தனபால (வயது 37) என்ற சிப்பாயே காயமடைந்தவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை புத்தர்சிலை விவகாரம்; நகரசபையே முடிவெடுக்கலாம்!

## பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவிப்பு

கொழும்பு —

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக உயர்நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை தொடர்ந்தும் விசாரணை செய்வதில்லை என உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த புத்தர்சிலையை அகற்று வதற்கு திருகோணமலை நகரசபைக்கு உத்தரவிடவேண்டும் எனக்கோரி சட்டமா அதிபர் திருகோணமலை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தமை யானது அடிப்படை (12 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# விடுதலைக்கான போரை ஆரம்பிக்க காலம் தாழ்த்தாது உத்தரவிடுங்கள்!

## வடமராட்சி கிழக்கு மக்கள் தேசியத் தலைவருக்கு கடிதம்

வடமராட்சி—

கடந்த மூன்று தசாப்த கால போர்ச் சூழ்நிலையிலும், கடந்த மூன்றரை வருட கால சமாதான காலத்திலும் நாம் சந்தித்து வந்த கஷ்டங்களுக்கு விடிவு ஏதும் கிட்டவில்லை. அதேவேளையில் தொடர்ந்தும் கஷ்டங்களுக்கு மத்தியிலும், இன்னல்களுக்கு உள்ளாகியும் வாழ நாம் விரும்ப வில்லை.

நாம் சுதந்திரமாகவும், கௌரவத்துடனும் வாழ்வதற்காக தனி நாடு ஒன்றை அமைப்பதற்கான இறுதிப் போரினை காலம் தாழ்த்தாது முன்னெடுப்பதற்கு கட்டளை இடவேண்டும்.

இவ்வாறு வடமராட்சி கிழக்கு வாழ் மக்கள் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சமாதானச் சூழல் ஏற்பட்டு மூன்றரை வருடங்கள் ஆகின்றன. எனினும் அதன் பலாபலன்கள் எமது மக்களைச் சென்றடையவில்லை. இனிமேலும் பொறுமை காக்க முடியாது. சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதில் இனியும் காலம் தாழ்த்த முடியாது. சமாதானச் சூழலில் பெற வேண்டிய எவையும் எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை. போருமற்ற, சமாதானமுமற்ற, நிச்சயமற்ற ஒரு சூழலில் வாழ்வதிலும் பார்க்க போர் மூலமாக எமது உரிமைகளைப் போராடி பெறுவதே மேலானது.

தற்போதுள்ள சமாதானச் சூழல் நீடிப்பதால் எமக்கு எந்த வித பலனும் கிடைக்காது. அதேநேரம் உரிமையைப் பெறும் காலமும் நீண்டு கொண்டே செல்கிறது. பேச்சுக்கள் மூலம் எமது மக்களுக்கான உரிமைகள் கிடைக்கப்போவதில்லை. எனவே சுதந்திரப் போராட்டத்தைக் காலம் தாழ்த்தாது முன்னெடுப்பதற்கு கட்டளை இடவேண்டும்.

சமாதான காலத்தில் நன்மை அடைந்தது தென்பகுதி மக்களே. எமது மக்கள் அல்ல. எமக்கு இதுவரை இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. உலகிற்குப் போலியான சமாதானத்தைக் காட்டிக்கொண்டு, தமிழ் மக்களுக்கு யுத்த காலத்தை விட அதிகமான அழிவுகளையே சிறீலங்கா அரசு மேற்கொண்டு வருகிறது.

எனவே, இனியும் இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது. போர்க் காலத்திலும் பார்க்க, சமாதான காலத்திலேயே எமது மக்களும், போராளிகளும் பல இழப்புக்களையும், பின்னடைவுகளையும் சந்தித்துள்ளனர்.

சமாதானம் எமது மக்களுக்கு எதைத் தந்தது? எமது மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறி, இயல்பு வாழ்வை வாழ முடிந்ததா? இல்லை. உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி எமது மக்களின் வாழ்விடங்களையும், பயன் தரும் நிலங்களையும், கடலையும் எதிரி ஆக்கிரமித்துள்ளான். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இன்றும் கடற்தொழிலாளர்கள் நிம்மதியாகக் கடற்தொழிலுக்குச் செல்ல முடியவில்லை.

அத்துடன் கைக்கூலிகளை வைத்து எமது மக்களின் இயல்பு வாழ்வை எதிரி சீர்குலைக்கிறான். சொந்தப் பாடசாலைகளில் கல்வி கற்க முடியவில்லை. வைத்தியசாலைகளைத் திறந்து இயக்க முடியவில்லை. எமது ஊரின் பிரதான பாதையான நாகர்கோவில் பாதை எமக்கு இன்னும் திறந்து விடப்படவில்லை. இது போன்று பல நிறுவனங்களும் இங்கு செயற்பட முடியவில்லை. ஏன்?

உயர் பாதுகாப்பு வலயம். இந்த நிலை எமக்கு வேண்டுமா? இந்த நிலை மாறவேண்டும். இதற்கு யுத்தமே ஒரே ஒரு வழியாகும். எமது வரலாற்றில் சிங்கள தேசம் எமக்கு அவலங்களையும், அழிவுகளையும் தவிர வேறெதையும் தரவில்லை. மறுக்கப்பட்ட, பறிக்கப்பட்ட எமது உரிமைகளை அடித்துப் பெறுவதே எமது வரலாறு ஆகிவிட்டது. எனவே காலத்தைத் தாழ்த்தாது எமது உரிமைகளை நாமே போராடிப் பெறுவதற்கான வழி வகைகளை செய்து வழிகாட்டுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் மக்களின் இயல்பு வாழ்வு நிலையை ஏற்படுத்துவதற்காக பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. உண்மையில் மக்களுக்கு அதில் சந்தேகமே இருந்தது. அது இன்று உண்மையாகி விட்டது.

சமாதான காலத்தில் எமது மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கான சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதே கதியில் அது இல்லாமல் போனது. எமக்கு எதையாவது அது தந்ததா. அமைதி வழியில் தீர்வைக் காணும் பொருட்டு இடைக்கால நிர்வாகத்துக்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டபோது, சந்திரிகா- அரசைக் கலைத்து அதனை செயலிழக்கச் செய்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித புனர்வாழ்வு மீள்கட்டுமானத்தை ஏற்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பை புத்தர் சிலை விவகாரத்தால் இழுத்தடித்து இல்லாமல் செய்ய அரசு முயற்சித்தது.

சர்வதேச நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கட்டமைப்பு கைச்சாத்தான பின்னர், சிங்கள அரசின் உச்ச நீதிமன்றம் தடை உத்தரவை விதித்து செயற்படவிடாமல் தடுத்துள்ளது. எனவே எமது மக்களின் எதிர்கால வாழ்வை நிர்ணயிப்பது நாம் என்பது மீண்டும் ஒரு தரம் உணர்த்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவின் பெயரால் அரச படையின் அனுசரணையுடன் ஆயுததாரிகளால் எமது போராளிகள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எமது தாயக தேசத்திற்கு வலுவூட்டும் வகையில் செயற்பட்டு வரும் ஊடகவியலாளர்கள் திட்டமிடப்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். அரசு எம்மீது தொடுத்துள்ள நிழல் யுத்தத்தால் நாம் பல முனைகளிலும் இழப்புக்களைச் சந்தித்து வருகிறோம். இதை இனியும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. சர்வதேச சமாதான விரும்பிகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் வெறும் பார்வையாளர்களாகவே இருந்து கொண்டு வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்கிறார்கள்.

எனவே இந்த நிலையில் எம்மைத் தற்காத்துக் கொள்ள போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை. எனவே நாம் போராடி எமது வாழ்வை நிர்ணயிப்போம்.

ஆகவே எமது தலைவரே! நாம் தங்களை வேண்டுவதெல்லாம் எமது தாயக மீட்பிற்கான, சுதந்திரத்துக்கான இறுதிப் போரை விரைவில் தொடுக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு எதையும் அல்ல.

கடந்த போர்க் காலங்களில் எல்லைப் படை வீரர்களாகவும், துணைப் படை வீரர்களாகவும் போர்க்களத்தில் நின்று நாம் போராடியுள்ளோம். எதிர் காலத்திலும் தொடரும் போரில் தோளோடு தோள் நின்று உதவி புரிவோம் என்று உறுதி பூண்டுள்ளோம். இதில் எத்தகைய இழப்புகளையும் சந்திக்க நாம் தயாராக இருக்கிறோம். என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(21,122,14)

## யாழ். பொலிஸ் நிலையத்தில் இருவருக்கிடையே கைகலப்பு!

யாழ்ப்பாணம்—

காணி தொடர்பான விசாரணைக்கு யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட கை கலப்பில் வை. இம்மானுவேல் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் காணி தொடர்பான முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு வழக்காளியும், எதிரியும் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் இருவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடு முற்றியதன் காரணமாக வை. இம்மானுவேல் என்ற நபரை அவரது எதிராளி மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தினால் தாக்கியபோது அவர் காயமடைந்தார்.

இதையடுத்து வை. இம்மானுவேல் என்பவரை தாக்கிய நபருக்கு எதிராக யாழ். பொலிஸார் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் ஒன்றை செய்தனர். மேற்படி வழக்கை விசாரித்த நீதிபதி எதிராளியைத் தாக்கிய நபரை 25 ஆயிரம் ரூபா அரச ஆள்பிணையில் விடுதலை செய்தார். இவர்கள் தொடர்பான முறைப்பாட்டை நாளை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இது தொடர்பாக தாக்குதலுக்கு உள்ளானவர் தான் தாக்கப்பட்டதால் தனக்கு பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளுக்கென யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு நடத்த யாழ். மனித உரிமை ஆணைக் குழு இணைப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## கூட்டுறவு இயக்கத்தின் நூற்றாண்டையொட்டி பல்வேறு போட்டிகளை நடத்த ஏற்பாடு!

மானிப்பாய்—

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை எதிர்வரும் 2006ஆம் ஆண்டில் வெகு சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதனை முன்னிட்டு போட்டிகளை நடத்தவும், சிறந்த நிர்மாணங்களுக்கு பரிசுகளை வழங்கவும், ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான நிர்மாணங்களாக -

வாகனங்கள் பேன்றவற்றில் ஒட்டக்கூடிய ஸ்டிக்கர்கள், காட்சிப்படுத்துவதற்கான பெனர்கள், 30 நிமிட விவரண திரைப்படப் பிரதி போன்றவைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

மேலும் - நூற்றாண்டு காலக் கட்டம், 1906 - 2006 ஆண்டு காலமாகும். அத்துடன் எல்லா அடையாள முத்திரைகளிலும் கூட்டுறவு இயக்கத்தின் இயல்பு, தன்மை என்பன பிரதிபலிப்பதுடன் கூட்டுறவு இயக்கக் கொடியின் நிறம், கூட்டுறவு முத்திரை என்பன அடங்குதல் வேண்டும்.

இந்தப் போட்டியில் - சிறந்த நிர்மாணத்திற்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. மேற்படி நிர்மாணங்களின் மாதிரிகளை எதிர்வரும் (25-07-2005) ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதில் தலைமை செயலாளர் - பொதுமுகாமையாளர், இலங்கை தேசிய கூட்டுறவு சபை, 455, காலி வீதி, கொழும்பு-3. என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(100)

## முத்திரை விநியோகம் தொடர்பாக யாழ். செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்டத்தின் சமுர்த்தி முகாமையாளர், கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஆகியோருக்கான கூட்டம் இன்று காலை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்குவது தொடர்பாக விளக்கமளிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(44)

## கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்—

அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகளை மூன்று பிரிவுகளாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் க. நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

இந்து மாமன்றத்தால் நடத்தப்படவிருக்கின்ற இந்தப் போட்டிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும், மத்திய மாகாணம், ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும், மலையகம் முழுவதும் நடத்தப்படவிருப்பதாகவும் -

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பரிசில்களாக வழங்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## செல்வச்சந்நிதி உற்சவம் ஐந்தாம் திகதி ஆரம்பம்

தொண்டமானாறு—

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்த உற்சவம் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

கொடியேற்ற தினமான ஐந்தாம் திகதி மாலை இரண்டாம் திருவிழாவும், 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு பூங்காவனமும், 17 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறு நாள் காலை 8மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

காலைத் திருவிழா 8 மணிக்கும், மாலைத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது. உற்சவ காலத்தில் பஸ் சேவை, குடிநீர் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## பேர்ஸ் கண்டெடுப்பு

அரியாலை—

ஊரெழு கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த கணேஷ் ஜதர்சன் என்பவரது விசேட அடையாள அட்டையும் (0903003935), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பாடசாலை அடையாள அட்டையும், வாகன அனுமதிப் பத்திரமும் அடங்கிய பேர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர் K. தேவன், சங்கீதன் கபே, கனகரட்ணம் வீதி, அரியாலை என்ற முகவரியில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

(55)


சிறு விளம்பரம்

ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்
Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)

மனோகரா யாழ்ப்பாணம்
4 ஆவது வெற்றி வாரமாக
சியான் விக்ரம், சதா ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன் anniyan
20 ஆம் திகதி வரை
22 ஆம் திகதி முதல்
அதிரடி வெளியீடாக
மாதவனின்
பிரியசகி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
உள்ளம் கேட்குமே
தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

சங்கானை
முரளி, நாசர், பிரதிபஷா நடித்த
மனுநீதி
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

யாழ்ப்பாணம்
அக்ஷன் கிங் அர்ஜுன், சினேகா நடித்த

சின்னா
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா
விக்ராந், லக்ஷ்மிராய் நடித்த

கற்க கசடற
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

### சுனாமி புனரமைப்புக்கென

# அரசசார்பற்ற நிறுவனங்களூடாக வெளிநாடுகள் நிதி வழங்க திட்டம்!

கொழும்பு —

சுனாமி நிவாரண சபைக்கு நிதி வழங்க முடியாதென தெரிவித்திருக்கும் வெளிநாடுகள் - இலங்கையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களூடாக புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களின் நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளமையாலும் மற்றும் அரசின் கொள்கைகளாலும் சுனாமி நிவாரண சபைக்கு நிதி வழங்க முடியாதென தெரிவித்துள்ள நாடுகள், தங்களின் நிதியை இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களூடாக சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்காவும் மேலும் சில ஐரோப்பிய நாடுகளும் இவ்வாறு செயற்படத் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பிரித்தானியாவிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், அவர்கள் தங்களின் நிதியுதவி குறித்து இதுவரை எதனையும் அறிவிக்கவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் புனரமைக்கவென இலங்கைக்கு தங்களின் நாடு ஒதுக்கியுள்ள நிதியை நேரடியாக திறைசேரிக்கு வழங்கவுள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சுனாமி அனர்த்த புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென ஜப்பான் வழங்கும் நிவாரண உதவிகளில் பெருமளவு குறைந்த வட்டியைக் கொண்ட இலகுக் கடன் என்பதே அதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி நிவாரண சபைக்கு கடன் வழங்கினால், அதனைப் மீளப் பெறுவது சம்பந்தமான பிரச்சினைக்கு உதவி வழங்கும் நாடுகள் முகங்கொடுக்கவேண்டி ஏற்படும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடைவிதித்துள்ள அவுஸ்ரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் இலங்கைக்கு உதவும் வகை குறித்து விரிவாக ஆராய்ந்து வருவதாக இராஜதந்திர வட்டார தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது, சுனாமி அனர்த்த புனரமைப்புக்கென இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகளை திறைசேரியூடாக வழங்கவே அந்த நாடுகள் தீர்மானித்திருந்தன.

இந்த உதவிகளை பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கைகளில் 70 சதவீதமானவற்றில் அரசாங்கம் இதுவரை கைச்சாத்திட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சுனாமி நிவாரண சபைக்கு பிரதான நாடுகள் நிதியுதவிகளை வழங்காத போதிலும், அந்த நாடுகள் அரசசார்பற்ற நிறுவனங்களூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியுதவிகளை வழங்கும்போது - சுனாமி நிவாரண சபையின் மாவட்ட மற்றும் பிரதேச குழுக்கள் சமர்ப்பிக்கும் யோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிபந்தனைகளை முன்வைக்க அந்த நாடுகள் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போதைய நிலைக்கு அமைய இலங்கையில் சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென கிடைக்கும் உதவிகளில் 70 வீதம் நேரடியாக அரசின் திறைசேரிக்கும் ஏனைய 30 வீதம் சுனாமி நிவாரண சபைக்கும் கிடைப்பதற்கு இடமுள்ளதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

நோர்வே, சுவீடன், டென்மார்க் உட்பட்ட வட ஐரோப்பிய நாடுகளே சுனாமி நிவாரண சபைக்கு நேரடியாக நிதியுதவி வழங்க முன்வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

# தேர்தல் ஆணையாளருடன் சட்டமா அதிபர் சந்தித்து பேச்சு

### ஜனாதிபதி தேர்தல் குறித்து விவாதம்?

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் பேரணி நடந்து முடிந்த 24 மணி நேரத்தினுள் தேர்தல் ஆணையாளருக்கும் சட்ட மா அதிபருக்குமிடையே முக்கிய சந்திப்பு இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பு சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான காலம் குறித்து எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தே இவ்விருவரும் உரையாடியிருப்பதாக தெரியவருகிறது. அத்துடன் அந்தப் பிரச்சினை தொடர்பாக மிக இரகசியமான ஒரு முடிவை இருவரும் எடுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

சில அரசியல் கட்சித் தலைவர்களும், ஊடகவியலாளர்களும் இந்தச் சந்திப்பு குறித்து தேர்தல் ஆணையாளரிடமும், சட்ட மா அதிபரிடமும் வினாவியுள்ளனர். எனினும், கடந்த பொதுத்தேர்தலின் விருப்புவாக்கு பற்றிய வழக்கொன்று சம்பந்தமாகவே இருவரும் உரையாடியதாக அவ்விருவரும் தெரிவித்தனர்.


தேர்தல் சம்பந்தமான முடிவை அறிவிக்கும் வரை அதனை வெளியிடாது இருப்பதற்கு தேர்தல் ஆணையாளரும், சட்ட மா அதிபரும் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் தேர்தல் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் தனது இறுதித் தீர்மானத்தை விரைவில் எடுப்பார் எனத் தெரியவருகிறது.

# பொதுக்கட்டமைப்பு குறித்த பொறுப்பு வழங்கப்படவில்லை!

### அரச பிரதிநிதி டியூ. குணசேகர

கொழும்பு —



சுனாமிக்குப் பின்னரான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் செயற்படும் பிரதான குழுவின் அரச பிரதிநிதி என்ற வகையில் இதுவரை தம்மிடம் எதுவித பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படவில்லை என்று, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்தார்.

பிரதான குழுவின் மற்றைய அங்கத்தவர்களாக விடுதலைப் புலிகள் இயக்கப்பிரதிநிதி ஒருவரும், முஸ்லிம் தரப்புப் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும். இன்னமும் அந்தப் பிரதிநிதிகள் நியமிக்கப்படாமையே இதுவரை எவ்வித பொறுப்பும் ஒப்படைக்கப்படாததற்குரிய காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தப் பிரதிநிதிகள் இருவரும் எதிர்வரும் சில நாட்களில் நியமிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும், உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட மாகாண குழுவைத் தவிர மாவட்டக் குழு, பிரதேசக் குழுக்களின் நடவடிக்கைகள் இதற்கமைய செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் டியூ.குணசேகர மேலும் தெரிவித்தார்.

(தே)

### ஜனாதிபதி மாளிகை பகுதியில்

# ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டால் 2 வருடங்கள் சிறைத்தண்டனை

கொழும்பு —

ஜனாதிபதி மாளிகை பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் இரண்டு வருட சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், வாகனத் தொடரணிகள், பொதுக்கூட்டங்கள் என்பன நடத்த முழுமையான தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் தொடர்பான விதிகள் கடந்த 2001 ஆம் ஆண்டு நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் அமுலுக்கு வருகின்றது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த விதிகளை மீறுவோருக்கு இரண்டு வருட கால சிறைத் தண்டனை அல்லது ஐயாயிரம் ரூபா அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் 1994, 2001 காலப்புகுதியில் இருந்த ஒழுங்கு விதிமுறைகளோடு சேர்த்து கடைப்பிடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக ஜனாதிபதி மாளிகையை நோக்கியும், அதற்கு சமீபமாகவும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததையடுத்தே இந்தப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அதியுயர் பாதுகாப்பு வலய பிரகடனம் ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# இராணுவ வாகனம் மீது கைக்குண்டு வீச்சு!

திருகோணமலை —


திருகோணமலை நகரின் நுழைவாயிலிலுள்ள லிங்கநகரில் கண்டி வீதி ஊடாக நேற்று முன்தினம் நண்பகல் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

எனினும் இந்தக் கைக்குண்டு வெடிக்காததால் சேதங்கள் ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து இந்தக் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுப்படை தளபதி தயா சந்தகிரியின் ஆயுத நடவடிக்கைகளில் சந்தேகம்!

## கொள்வனவுகளை இடைநிறுத்தினார் ஜனாதிபதி

கொழும்பு —



கூட்டுப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடந்த காலத்தில் முப்படைகளுக்குமென ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் - இந்த விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் - சந்தகிரிக்கும் இடையில் முறுகல்நிலை முற்றியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இராணுவத் தளபதிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் இராணுவத்துக்கான புதிய கொள்வனவு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தடைவிதித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட, முப்படைகளின் தளபதியும், கடற்படைத் தளபதியுமான தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா ஆகியோர் பங்கேற்றனர்.

தற்போது கொள்வனவுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவுகளைத் தவிர்ந்த புதிய உத்தரவுகளுக்கே அவர் தடைவிதித்தார். நிதி நெருக்கடிகளைக் காரணம் காட்டியே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தத் தடையை விதித்திருந்தாலும், தயா சந்தகிரியின் கடந்தகால கொள்வனவுகளின் மீதான சந்தேகங்களே இந்தத் தடைக்கு உண்மையான காரணம் என்று இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் பிரிட்டனிடமிருந்து சேர் கலகட் என்ற பாரிய கப்பலை கொள்வனவு செய்ய வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி திட்டமிட்டிருந்தார்.

கடற்படைக்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் எவையும் உரிய மதிப்பீடுகளின் அடிப்படையில் இல்லாததும், கடந்த காலங்களில் பெருந்தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் இராணுவ மதிப்பீட்டுக் குழுக்கள் கண்டுபிடித்து ஆயுதக்கொள்வனவுக்கு தடைவிதிக்க சந்திரிகாவிடம் பரிந்துரைத்தன.

தயா சந்தகிரி இதுவரை பிரிட்டனிடம் இருந்தே அனைத்துத் தளபாடங்களையும் கொள்வனவு செய்துள்ளார் என்பதையும் இந்தக்குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.




65 கோடி 83 லட்சத்து 66 ஆயிரத்து 100 ரூபா பெறுமதியான தளபாடங்கள் பிரிட்டனிடமிருந்து கடந்த சில ஆண்டுகளில் கடற்படைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்கான பல்வேறு தரவுகளையும் தளபாடங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கான ஆதாரங்களையும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் மதிப்பீட்டுக் குழு அளித்ததாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் கிழக்குப் பகுதியின் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு, பின்னர் மாற்றப்பட்ட சரத் வீரசேகரவும் சில தரவுகளை ஜனாதிபதிக்கு அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களாலேயே தயா சந்தகிரியின் ஆயுதக் கொள்வனவுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா தடை விதித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# மேற்கிந்திய வீரர் லோசனின் பந்துவீச்சு முறையில் சந்தேகம்



லண்டன்—

மேற்கிந்தியத்தீவுகள் வீரர் ஜெர்மைன் லோசனின் பந்து வீச்சுக் குறித்து சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை முடிவுற்ற இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்டுக்களை கைப்பற்றினார் 23 வயதாகும் லோசன்.

ஆனால், அவரது பந்து வீச்சு முறையில்(எறிவதாக) சந்தேகம் உள்ளதாக கள நடுவர்கள் சைமன் ரஃபெல், நதீம் காரி மற்றும் டிரி, பீட்டர் மனுவல் ஆகியோர் புகார் கூறியுள்ளனர்.

அதை அறிந்த போட்டி நடுவர் மைக் புராக்டர் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி), மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்வாகம் ஆகியோருக்கு அந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி புதிதாக மாற்றியமைத்துள்ள விதிமுறைப்படி தனது பந்துவீச்சு உள்ளதென்பதை லோசன் தனிப்பட்ட விதத்தில் நிரூபிக்க வேண்டும். இதுகுறித்து ஐ.சி.சியிடமிருந்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை முறையான அறிக்கையை பெற்ற 21 தினங்களுக்குள் அவர் நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை பெற்றுள்ளார்.

இதனால் கண்டியில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



# 2 ஆவது காட்சிப் போட்டியிலும் ராவிட் அணிக்கே வெற்றி!

பெங்களூர்—

பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காட்சி கிரிக்கெட் போட்டியொன்றில் ராவிட் அணி 5 விக்கெட்டுக்களால் ஷேவாக் அணியைத் தோற்கடித்தது.

முதலாவதாக ஷேவாக் அணி துடுப்பெடுத்தாடியது. ஷேவாக் ஆட்டத்தில் பொறி பறந்தது. முந்தின நாள் போட்டியில் 13 பந்துகளைச் சந்தித்து ஒரு ஓட்டத்தை மட்டுமே எடுத்த ஷேவாக் அந்த வாட்டத்தை எல்லாம் சேர்த்து வைத்து நேற்று விளாசித் தள்ளினார்.

ஷேவாக் 78 பந்துகளில் 96 ஓட்டங்களைக் குவித்தார். அதில் 12 பவுண்டரிகள் அடங்கியிருந்தன. அவர் ஒன்றிரண்டு பிடி கொடுத்து அவை நழுவவிடப்பட்டதால் தப்பிப்பிழைத்து இந்த ஸ்கோரை எட்டினார்.

ஷேவாக் அணியில் அருமையாக விளையாடிய மற்றொரு வீரர் வேணுகோபால்ராவ்.



அவர் 99 பந்துகளில் 91 ஓட்டங்களைக் குவித்தார். இன்னொரு வீரர் தீரஜ் ஜாதவ் 54 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுத்தார்.

இந்த இருவரும் 6 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ஆடி 94 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது. சகீர்கான் வீசிய ஒரு ஓவரை வேணுகோபால் ராவ் நன்றாகப் பதம் பார்த்தார். அந்த ஒரே ஓவரில் 4 பவுண்டரிகளை அவர் விளாசியபோது சகீர்கான் நொந்துபோனார்.

கடைசியாக ஷேவாக் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 302 ஓட்டங்களைக் குவித்தது. ராவிட் அணி பந்துவீச்சாளர்களில் சகீர்கான், ஜே.வி.யாதவ் இருவரும் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர். ஹர்பஜன் சிங் தனக்கு ஒதுக்கப்பட்ட 10 ஓவர்களையும் வீசி 49 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தும் கூட விக்கெட் எதுவும் எடுக்கமுடியவில்லை.

அடுத்து களமிறங்கிய ராவிட் லெவன் அணிக்கு கம்பீர் 47, லக்ஸ்மண் 76 ஓட்டங்களுடன் சிறப்பான தொடக்கத்தை அளித்தனர். 23.4 ஓவரில் இந்த அணி 1 விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது.

இதனால் 39 ஓவரில் 237 ஓட்டங்களாக வெற்றி இலக்கு மாற்றப்பட்டது. யுவராஜ் சிங் 42, ராவிட் 39 ஓட்டங்களை எடுத்து பொறுப்புடன் ஆட 37.2 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 240 ஓட்டங்களை எடுத்து ராவிட் லெவன் அணி வெற்றிபெற்றது.

# கே.சி.சி.சி கிண்ண கிரிக்கெட்; ஜொனியன்ஸ் அணி வெற்றி!

கொக்குவில்—

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான 30 ஓவர்கள் கொண்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - நேற்றுமுன்தினம் காலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டுக்களால் கிறாஸ்கொப்பஸ் அணியைத் தோற்கடித்தது.



நாணயச் சுழற்சியில் வென்ற கிறாஸ்கொப்பஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.


இதில் தர்சன் 22, அச்சுதன் 18, மயூரன் 16, தனஞ்செயன் 15, ஹரிபிரசாத் 21, கோபிநாத் 11 மற்றும் சிறிதரன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக நிரூபன் 3, நவகீதன் 2, மதன்ராஜ் 2, சஞ்சீவன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியெனக் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 22.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களைமட்டும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் நேசவர்மன் 20, ரட்ணம் 19, மதன்ராஜ் 28, நிரூபன் 21, மயூரதன் மற்றும் குமணன் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 46, 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிறிதரன் மற்றும் அச்சுதன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# டேவிஸ் கிண்ண ரெனிஸ்; ஹெவிட் அதிர்ச்சித் தோல்வி



சிட்னி—

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற டேவிஸ் கிண்ண காலிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியா, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின. மூன்று போட்டிகளின் முடிவில் ஆர்ஜென்ரீனா 2-1 என்ற முன்னிலையில் இருந்தது.

நான்காவது ஒற்றையர் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. உலகின் இரண்டாம் நிலை வீரரான அவுஸ்ரேலியாவின் லேடன் ஹெவிட், ஆர்ஜென்ரீனாவின் நள்பாந்தியனை எதிர்த்து விளையாடினார். ஒரு மணி 54 நிமிடங்கள் நடந்த இந்தப் போட்டியில் நள்பாந்தியன் 6-2, 6 -4, 6-4 என்ற நேர் செட்களில் ஹெவிட்டை வீழத்தினார். இந்த வெற்றியின்மூலம் ஆர்ஜென்ரீனா 3-1 என்ற முன்னிலையில் அரையிறுதிக்கு முன்னேறியது.

விளையாட்டு

# நடுத்தர எடை குத்துச்சண்டை ஹெப்கினஸ் தோல்வியுற்றார்



லொஸ்வேகாஸ்—

உலக நடுத்தர எடை சம்பியன் பட்டத்துக்கான குத்துச் சண்டைப் போட்டியில் ஹெப்கினஸ் தோல்வியுற்றார்.

அமெரிக்காவிலுள்ள லாஸ் வேகாசில் நடந்த இந்தப் போட்டியில், அமெரிக்காவைச் சேர்ந்த 26 வயதான ஜெர்மைன் டெய்லர் சக நாட்டு வீரரான 40 வயது பெர்னார்ட் ஹெப்கின்ஸ”டன் மோதினார். இருவரும் சரமாரியாகக் குத்துவிட்டனர்.

12 சுற்றுகள் முடிவில் இரு நடுவர்கள், டெய்லர் 115-113 என்ற கணக்கில் வென்றதாக அறிவித்தனர். மற்றொரு நடுவர் ஹெப்கினஸ் 116-112 புள்ளிகள் பெற்றதாக அறிவித்தார்.

1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஹெப்கின்ஸ் பெற்ற முதல் தோல்வி இதுவாகும். டெய்லர் 2000 ஆம் ஆண்டில் சிட்னியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுழற்சிமுறை தொடர் போட்டிகள்; இந்தியா - அவுஸ்ரேலியா இணக்கம்

கொல்கத்தா—

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை டெஸ்ட் போட்டியிலும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாள் போட்டியிலும் சுழற்சி முறையில் இந்தியாவும் - அவுஸ்ரேலியாவும் விளையாட முடிவு செய்துள்ளன.

இதுகுறித்து, கிரிக்கெட் அவுஸ்ரேலியா தலைவர் பொப் மெரிமான் கொல்கத்தாவில் கடந்த சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது -

4 ஆண்டுக்கு ஒருமுறை 4 டெஸ்ட் போட்டிகளிலும், 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை 5 ஒரு நாள் போட்டிகளிலும் சுழற்சி முறையில் (இந்தியாவிலும் அவுஸ்ரேலியாவிலும் மாறி மாறி) விளையாட முடிவுசெய்யப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபையின் 6 ஆண்டு திட்டப்படி இந்த முடிவை அங்கீகாரம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அடுத்தமாதம் டுபாயில் நடைபெறும் ஐ.சி.சி கூட்டத்தில் அநேகமாக இந்த முடிவு விவாதிக்கப்படலாம்.

அங்கீகாரம் அளித்துவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒக்ரோபரில் போட்டி அட்டவணை உறுதி செய்யப்பட்டுவிடும் என்றார் மெரிமான்.

# உதைபந்தாட்ட போட்டி

பருத்தித்துறை—

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் காலிறுதியாட்டத்துக்குத் தெரிவுசெய்வதற்கான போட்டிகள் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

இன்று மாலை 3.30 மணிக்கு சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும், 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன. (12)

# இரு பிரிவுகள் இந்திய சுற்றுலா; இலங்கை அணி சம்மதம்!

கொழும்பு—

இந்திய சுற்றுப்பயணத்தை இரண்டு பிரிவுகளாக மேற்கொள்ள இலங்கை கிரிக்கெட் சபை சம்மதித்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபரில் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவிருக்கிறது.

இந்த மாதத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் சூப்பர் சீரிஸ் தொடர், தென்னாபிரிக்க அணிக்கெதிரான 5 ஒரு நாள் போட்டிகள்கொண்ட தொடர் என நிறைய போட்டிகளில் இந்திய அணி பங்கேற்க வேண்டியிருந்தது.

இதனால் இலங்கை தொடரை இரண்டு பிரிவுகளாக நடத்த இந்திய கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்தது. இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவரான ஜெயந்த தர்மதாஸ அளித்த பேட்டியில் -இந்திய கிரிக்கெட் சபையின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபரில் இந்தியா செல்லும் இலங்கை அணி 7 ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடும். பின்னர் டிசெம்பரில் 3 டெஸ்ட் போட்டியில் விளையாட மீண்டும் இந்தியா செல்லும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் உளநலம் தொடர்பான தமிழ் நூல்கள் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படுகின்றன!

## ஜி.ரி.இசற் இணைப்பாளர் சுந்தரம் டிவகலாலா

யாழ்ப்பாணம் —

ஆசிரிய உளவளத் துணையாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு உதவக்கூடியதான கைந்நூல் ஒன்றைத் தயாரித்துத் தருமாறு - ஜி.ரி.இசற் பீ கெயர் அமைப்பு கேட்டபொழுது, பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் வழிகாட்டுதல்களில் பலர் இரவு பகலாகக் குழுவாக இயங்கி, ஒரு சிறப்பான கைந்நூலை உருவாக்கி வழங்கியுள்ளனர் என, ஜி.ரி.இசற் இணைப்பாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற உளவளப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

சிறுவர் உள நலம் என்ற இந்தக் கைந்நூல் - இன்று ஆங்கிலம், சிங்களம் என மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள மொழியில் 80 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்படவுள்ளன.

உண்மையில் உளவியல் துறை தொடர்பில் நாங்கள் தருவதை நீங்கள் படியுங்கள் எனக் கூறி, பிறமொழிக்கு உளவியல் தொடர்பான புத்தங்கள், கைந்நூல்களை கொடுக்கும் அளவுக்கு நாம் தமிழ் மொழியில் வளர்ந்துள்ளோம்.

எமக்கு, எமது மொழிக்கு சேர்ந்து விட்ட இந்தப் பெருமை முற்றுமுழுதாக பேராசிரியர் தயா சோமசுந்தரத்தையே சாரும்.

இந்தத் திட்டத்தை ஜி.ரி.இசற் நிறுவனம் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் என்னிடம் தந்து ஆயிரம் நட்புதவியாளர்களையும், 150 உளவளத் துணையாளர்களையும் பயிற்றுவித்து, அவர்களுக்கூடாக தனக்கென்று ஒரு எதிர்காலம் இல்லை என்று ஏங்கும் இளம் சந்ததிக்கு- குறிப்பாக மாணவர்களுக்கு வழிகாட்டுமாறு வேண்டப்பட்டேன்.

அன்று முதல் இன்றுவரை பலரதும் உதவிகளைப் பெற்று, குறிப்பாக பேராசிரியர் தயா சோமசுந்தரத்தினதும், சாந்திகம் நிறுவனத்தினதும் உதவிகளைப் பெற்று அவர்களது பலத்தோடு இன்று வரை 154 உளவளத் துணையாளர்களையும், 1200 நட்புதவியாளர்களையும் பயிற்றுவித்துள்ளோம்.

இந்த மண்ணிலே தற்போதும் தங்கி நின்று சேவை புரிபவர்கள் அற்புதமானவர்களே. இந்த மண்ணுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பயப்படாமல் செய்யவேண்டும். அதற்கு நாம் துணிவு பெறவேண்டும்.

இங்கே பயிற்சிபெற்று வெளியேறும் வெளியேறிய உளவளத் துணை ஆசிரியர்களே - உங்கள் முன் ஒரு பாரிய கடமை உண்டு.

எமது பிரதேசங்களில் சுனாமி வந்த பிறகு, அதில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் ஏறக்குறைய 49 ஆயிரம் பிள்ளைகள் என எமது மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவர்களில் 61 வீதமானவர்களுக்கு உளவளத்துணை அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

எம்மிடம் இதுவரை 150 வரையிலான உளவளத்துணை ஆசிரியர்களே பயிற்சி பெற்றுள்ளனர். இந்த நிலையில் உதவி தேவைப்படும் 29 ஆயிரம் பிள்ளைகளையும் நாம் புறக்கணித்து விடவும் முடியாது.

எனவே, இப்பொழுது நாம் அனைவருமே உள நெருக்கீட்டுக்கு உள்ளாகிய பிள்ளைகளது கல்வி நிலைபற்றி சிந்திக்க வேண்டிய கட்டாயத் தேவையிலுள்ளோம் எனத் தெரிவித்தார். (31)

## இளைஞர்கள் மீது படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம் —

வறணி - இடைக்குறிச்சிப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் படையினரால் தாக்கப்பட்டனர்.

படையினர் இவர்களைச் சோதனையிட முற்பட்டபோது - அதற்கு இந்த இளைஞர்கள் மறுப்புத் தெரிவித்தபோது படையினர் இவர்களைத் தாக்கியதாக தெரியவருகிறது.

வறணியைச் சேர்ந்தவர்களான கந்தசாமி சசீகரன் (வயது 28) மற்றும் சுந்தரம் சுகுமார் (வயது 22) ஆகியோரே படையினரால் தாக்கப்பட்டவர்களாவர்.

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் —

ரலன்ற் பாலர் கல்விச் சேவையின் இந்த ஆண்டுக்கான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ரலன்ற் கல்வி நிறுவன வளாகத்தில் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் ஜ. செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக - வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் வே. குலநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (12)

## மீன்பிடி அமைச்சின் அழைப்பை வடமராட்சி மீனவர்கள் நிராகரிப்பு

வடமராட்சி —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களை இன்று மீண்டும் கொழும்புக்கு வருமாறு, மீன்பிடித்துறை அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

இருப்பினும் அமைச்சின் இந்த அழைப்பைத் தாம் புறக்கணித்திருப்பதாக வடமராட்சி மீனவர்கள் தெரிவித்தனர்.

மீன்பிடித்துறை அமைச்சு முன்னொரு முறையும் இப்படி அழைத்து தமக்கு எந்தவித உதவிகளும் வழங்கவில்லை என்றும், தம்மைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளிடம் நிதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே மீன்பிடித்துறை அமைச்சு இந்த அழைப்பை விடுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

## பருத்தித்துறை ஆலயத்தில் புத்தர்சிலை எதிர்த்து போராட்டம் நடத்த திட்டம்?

வடமராட்சி —

பருத்தித்துறையில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரின் 524 ஆவது படைப் பிரிவுத் தலைமையகப் பகுதியில் உள்ள வைரவர் ஆலயத்துக்குள் படையினரால் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்த ஆலய பரிபாலன சபையினர் கடும் விசனம் தெரிவித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இந்த வைரவர் ஆலயம் அமைந்துள்ள நிலையில், அங்கு புத்தர் சிலை வேண்டுமென்றே படையினரால் திணிக்கப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இந்தப் புத்தர் சிலையை அகற்றக்கோரி - பருத்தித்துறை மக்கள், பொது அமைப்புகள் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடுவதாகவும் தெரியவருகிறது.

## கடற்தொழிலாளர் சமாசத்துக்கு ஆறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

வடமராட்சி —

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து, யாழ். மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசங்களின் வளர்ச்சி, செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆறு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வெளிச்சவீடு அமைப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் வளர்ச்சி செயற்பாடுகளுக்காக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (21)

# பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்களுக்கு உடனடியாக நேர்முகப் பரீட்சை நடத்துக!

## வட-கிழக்கு பட்டதாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் ஆசிரியத்துறையில் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட பட்டதாரிகளுக்கு- பட்டதாரி நியமனத்துக்கு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்ட போதும் இதுவரை நேர்முகப் பரீட்சை நடத்தப்படாமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் ஒப்பமிட்டு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

இந்தக் கடித்ததில் மத்திய அரசின் கீழ் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் நேர்முகப் பரீட்சை மட்டும் நடத்தப்பட்டு, நிரந்தர நியமனங்கள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.

கடந்த காலங்களில் சகல பட்டதாரிகளுக்கும் ஒரே திகதியில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், இவ்வாறான நிலை தற்போது நடைமுறைப்படுத்தப்படாது வெவ்வேறு திகதிகளில் நியமனம் வழங்கப்பட்டு வருகின்றமை எமக்கு மிகவும் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் போட்டிப் பரீட்சைக்கு முகங்கொடுத்து, நேர்முகப் பரீட்சைக்கும் சமுகமளித்தும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாது, இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றமை பட்டதாரிகளாகிய எமக்கு மிகவும் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையால், தமது மாகாண சபையின் கீழ் பட்டதாரி நிரந்தர நியமனத்துக்காகத் தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக எந்தவித அறிவுறுத்தலும் வெளியிடப்படாதது பட்டதாரிகளாகிய எம்மை மேலும் குழப்பமடைய வழிவகுக்கப்படுகிறது.

எனவே பட்டதாரிகளாகிய நாம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம் -

ஜூலை முதலாம் திகதி நிரந்தர நியமனத் திகதியிடப்பட்டு, எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கிடையில் சகலருக்கும் நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்கப்படல் வேண்டும்.

ஆசிரிய பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு உடனடியாக நேர்முகப் பரீட்சை நடத்தி, நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கையைத் தாங்கள் கவனத்தில் எடுத்து, விரைவில் நடவடிக்கையை மேற்கொண்டு எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு பட்டதாரிகளாகிய நாம் கேட்டுக்கொள்கிறோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதி யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (12)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஏழு




பெயர் : த.வாஹினி
முகவரி : யாழ்ப்பாணம்.


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்: ----------
முகவரி: ----------
பிறந்த ஆண்டு: ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.









அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற இந்து மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் வி.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், விழாவுக்கு அழைக்கப்பட்ட சமயட் 6 பரியார்களையும், நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## பல்சுவை அரங்கு

# அதிக அதிர்வுடன் ட்ரம்



ஓர் புதியவகை பிளாஸ்ரிக் இழையின் கண்டுபிடிப்பால் இனி இசைக் குழுவினர் பயன்படுத்தும் ட்ரம்களின் செயற்பாட்டில் கூடிய செயல் திறன் உருவாகவுள்ளது. இந்த வகைப் பிளாஸ்ரிக்கில் ஏற்படும் அதிர்வு அதிகமாக இருப்பதுடன், ஒலிவாங்கிகளிலும் கூடுதல் ஒலியை கொடுப்பதால், கிட்டார் போன்ற இசைக்கருவிகளில் ஏற்படும் தொடர்ச்சியான அதிர்வுகள் இதிலும் ஏற்பட வாய்ப்புண்டு.

இத்தகைய ட்ரம்கள் பின்லாந்து நாட்டில் தற்போது தயாரிக்கப்படுகிறது. இதில் பொருத்தப்படும் ஒலிவாங்கிகளும் கூடுதல் உணர்திறன் மிக்கதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.


# மோசமாகும் கொம்பியூட்டர் உளவு



கொம்பியூட்டர்களில் தகவல்களை உளவுபார்க்கும் நடவடிக்கை அமெரிக்காவில் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் சுமார் 90 வீதமானோர் தமது இணையங்களின் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த உளவு நடவடிக்கைகளால் இணையம் மூலம் முக்கிய ஆவணப்பரிமாற்ற நடவடிக்கைகூட பாதிக்கப்பட்டுள்ளதாம். அமெரிக்காவில் 80 வீதமான தனிப்பாவனை கொம்பியூட்டர்கள் இத்தகைய தேவையற்ற உளவுத் தாக்குதலுக்கு (Spyware) உள்ளாகியுள்ளதாக அண்மைய கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது.

# சனியின் சுழற்சி குறைவு



சனி கிரகத்தைச் சுற்றி அதிவேகமாக சுழன்றபடி இருக்கும் பாரிய கற்களும், துணிக்கைகளும் சேர்ந்தே ஓர் வளையம் போல் தோற்றமளிக்கிறது. இந்த வளையம் அதற்கென தனியான ஒரு வேகத்தைக் கொண்டிருப்பதாக, தற்போது சனிக்கிரகத்தை அண்மித்துள்ள கான்னி விண்கலம் அனுப்பிய படங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் அளவிட்ட வேகத்திலும் விட, சனிக்கிரகத்தின் சுழற்சியும் ஏழு நிமிடங்களால் குறைவாக காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சனிக்கிரகத்தின் வளையத்தில் ஒட்சிசன் மூலக்கூறுகள் பிரதானமானவையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# பாக்.கடலடி கேபிள் துண்டிப்பு



உலகத்துடனான பாகிஸ்தானின் தொலை தொடர்பை ஏற்படுத்தும் கடலுக்கடியிலான பாரிய கேபிள் (Underwater optic Fibre cable) பழுதடைந்ததால், அதன் வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்ட போதிலும், கடந்த வாரம் அது திருத்தப்பட்டு சீர்செய்யப்பட்டது.

கடலுக்கடியிலான கேபிள் பாதிக்கப்பட்டதாகப் பாகிஸ்தானின் வெளிநாட்டு வங்கிகள், தரகுகள், இன்ரநெட் சேவைகள் என்பன பாதிப்புற்றன.

பாகிஸ்தானின் ஒரேயொரு கடலுக்கடியிலான தொலைத்தொடர்பு கேபிள் - கடந்த மாதம் 27 ஆம் திகதி செயலிழந்தது. இதைச் சீர்செய்ய போதிய தொல்நுட்ப வசதி அதனிடம் இல்லாமையால், அது சுமார் 92 நாடுகள் அங்கம் வகிக்கும், இத்தகைய கேபிள்களைக் கையாளும் நிறுவனத்தின் உதவியையே பெற்றது. கடும் காலநிலை வேறுபாட்டால், அரேபியக் கடலுக்கடியில் திருத்த வேலைகள் ஆரம்பத்தில் தடைப்பட்டிருந்தன.

# பறவைக் காய்ச்சல்




பறவைக் காய்ச்சல் நோய் தற்போது பெருகிக் கொண்டு வருகின்ற இந்த நேரத்தில், விஞ்ஞானிகள் மலேசியாவில் தற்போது ஒரு கூட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்தப் பறவைக்காய்ச்சலுடைய பரவும் வேகம் சீனா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் அதிகம் இருப்பதாகக் கூறப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது இந்த நோய்க்குரிய காரணிகளையும் அத்துடன் அது எவ்வாறு தடுக்கப்படலாம் என்பது பற்றியும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. உண்மையில் இது ஒரு வைரஸ். இத்தகைய வைரஸ் அறிய முடியாததாகவும், விஞ்ஞானிகளைக் குழப்பக்கூடிய வகையிலும் காணப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, கிழக்காசிய நாடுகளிலேயே இத்தகைய நோய் கூடஇருப்பதாகவும், அதற்குரிய காரணம் அங்கே அதிகளவு கோழிப்பண்ணைகள் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

சீனாவில் மட்டும் ஏறத்தாழ 6 ஆயிரம் பறவைகள் இந்த நோயால் இறந்திருக்கின்றன.

இப்பொழுது இந்தநோய் - இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் பரவக்கூடிய வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சூழல் பாதுகாப்புக்கு தலைவர்கள் இணக்கம்



சூழல் வெப்பமடைவதால் அனைத்து மனித சமூகத்துக்கும் ஆபத்தானது என, அண்மையில் நடந்து முடிந்த G- 8 மாநாட்டின் தலைவர்கள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தமது நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களில் சூழல் வெப்பத்தை அதிகரிக்கும் மூலங்களை இனிப் பாவிப்பதில்லை என ஏற்றுக்கொண்ட இந்த அபிவிருத்தியடைந்த நாடுகளின் தலைவர்கள், இவற்றை முற்றாக நிறுத்துவதற்கான கால அட்டவணையையும் குறிப்பிடவில்லை.

இதில் அமெரிக்கா எந்த விதமான தளர்வுப் போக்கையும் காட்டவில்லை என, சூழல் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கண்டிக்கின்றனர். அமெரிக்கா தனது முன்னைய நிலையிலேயே பிடிவாதமாக இருக்கிறது.

# சிறுவர்களுக்கும் வாதநோய்



வயோபர்களுக்கு மட்டுமே வருகின்ற ஆதரரைட்டிஸ் நோய், தற்போது சிறுவர்களையும் தாக்குகிறது. ஐரோப்பா முழுவதிலும் பார்த்தால், ஏழத்தாழ 12 ஆயிரம் பிள்ளைகள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இது ஐரோப்பிய நாடுகள் முழுதும் ஒரு பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. ஆதரைட்டிஸ் நோய் என்பது, வெறுமனமே ஒருவாத நோயாகக் கருத முடியாது. இது உண்மையில் பல பக்கவிளைவுகளைத் தரக்கூடிய நோயாகத்தான் இருக்கும் என்று கூறப்படுகிறது. தற்போது 3 மில்லியன்கள் ஸ்ரேலிங் பவுண்கள் செலவில் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் இந்த நோய் எவ்வாறு சிறுபிள்ளைகளுக்கு ஏற்படுகிறது என ஆய்வு செய்வதற்குரிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆதரைட்டிஸ் நோயால் ஏற்படும் உடல் வெப்ப நிலையைக் காய்ச்சல் என்று கூறமுடியாது. அது சாதாரணக் காய்ச்சல் மருந்துகளால் குணமாக்க முடியாதது.

# திரை விமர்சனம்

## அலையடிக்குது

அந்நியன் படத்தின் மறுபதிப்புதான் இது என்றாலும், சற்று வித்தியாசமாக எடுப்பது போலக் காட்டிப் படம் எடுத்திருக்கிறார்கள். நகரத்துக்குள் வைத்துப் பெண்களைக் கெடுக்கும் காமுகர்கள் வரிசையாகக் கொல்லப்படுகிறார்கள். கொலை செய்பவர் சிந்து துலானிதான் என்பது தெரிகிறது. இதற்குப் பிறகு அவர் ஏன் கொலையாளி ஆனார் என விபரிக்கப்படுகிறது. இதுதான் முழுக் கதை. அரசியல்வாதி முதல் அதிகாரிகள் வரை பலர் கொல்லப்படுகிறார்கள். சில நேரங்களில் நகைச்சுவைத் தனமாகப் பழிவாங்குகிறார் சிந்து துலானி. நகைச்சுவைக்கு வெண்ணிற ஆடை மூர்த்தியைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் தந்தது நகைச்சுவையா என்று கெட்குமளவுக்கு இருக்கிறது. கொலை செய்பவர் ஆணா? பெண்ணா? என்று கூறுமளவுக்கு மர்மமாகப் படம் செல்கிறது. இந்தப் படத்தை இயக்கிய இயக்குநரைப் பெரிதாகச் சொல்லுமளவுக்கு அவர் ஒன்றுமே செய்யவில்லை எனத் தெரிகிறது. நாயகர்களாக நவீன்தனுஷ், சதீஸ்குமார் ஆகியோர் பெயருக்கு வந்துபோகிறார்கள். இசையமைப்பாளர் பரணி பாடல்களில் ஏமாற்றியிருக்கிறார். ஒளிப்பதிவு, திரைக்கதை, இயக்கம் ஆகியவற்றில் சொல்லும் படியாக எதுவும் இல்லை. ஆனால் இயக்குநரின் வசனங்களில் மட்டும் ஒரு மாற்றம் தெரிகிறது.



– றொஷானா –

# வேண்டாம் பிளாத்திக்




ஐரோப்பிய நாடுகளில் விளையாட்டுப் பொருட்களில் இரசாயனப் பதார்த்தங்களைச் சேர்ப்பதனைத் தடைசெய்யவேண்டும் என வைத்திய ஆய்வாளர்கள் கூறியிருக்கிறார்கள். சிறுபிள்ளைகள் இத்தகைய விளையாட்டுப் பொருட்களைப் பாவிக்கின்ற பொழுது, அவர்கள் சிலவேளைகளில் வாயிலே கடிக்கிறார்கள். இதன் மூலம், உடலுக்கு தீங்கு பயக்கக் கூடிய சில சேர்வைகள் உடலுடன் சேர்ந்து, பல பக்கவிளைவுகளை உருவாக்குகின்றன. கூடுதலாக இந்தப் பிளாத்திக் பொருட்களினால் ஆஸ்துமா மற்றும் புற்று நோய்கள் ஏற்படுகின்றன.

1999 ஆம்ஆண்டிலேயே இத்தகைய தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. நியூயோர்க் பல்கலைகழகத்தினுடைய பதிப்பின்படி, இப்படியான சிக்கல்களை, சில பொருட்களைச் செய்கின்ற கம்பனிகள் தங்களுடைய எதிர்ப்பினைக் காட்டுகின்றன. சில கம்பனிகளுடைய தயாரிப்புக் கடின பிளாத்திக் பொருட்களாகவே இருக்கின்றன.

# அதிகரிக்கும் பறவையினங்கள்


ஐரோப்பாவிலேயே மிகவும் பிரசித்திபெற்ற பறவையாகிய மரங்கொத்திப் பறவைகளின் எண்ணிக்கை அதிகமாகி, தற்போது எல்லா இடமும் தென்படுவதாகக் கூறப்படுகிறது. 2003, 2004 ஆம் ஆண்டளவில் மிகவும் அதிகரித்து, இந்தப் பறவையினங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. 2004 ஆம் ஆண்டளவில் 91 சதவீதமாக இந்தப் பறவையினங்கள் அதிகரித்துக் காணப்பட்டு இருக்கின்றன. இதற்கு அடுத்த எண்ணிக்கையில் காணப்படுகின்ற பறவை சாவின்ஸ். அத்துடன் பிளக் பேர்ட்ஸ் றென்ஸ், றொபிள்ஸ் மற்றும் கரியன் குறோஸ் ஆகியனவும் பெருவாரியாக அங்கே காணப்படும் பறவையினங்கள் என, ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



ஏறக்குறைய 20 பறவைகள் அங்கே அதிகமாகக் காணப்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன. 1970 ஆம் ஆண்டுக்கும் 2001 ஆண்டுக்குமிடையில் இந்தப் பறவையினங்களுடைய தொகை சடுதியாக அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கு ஒருகாரணமாக ஆபிரிக்காவில் ஏற்பட்ட குளிர்காலநிலை எனவும் கூறப்படுகிறது.

# விழும் இலத்திரனியல் சாதனங்கள்



சற்யோ கம்பனி தங்களுடைய நிறுவன ஊழியர்களில் 14 ஆயிரம் பேரை நீக்கியிருக்கிறது. இதற்குரிய காரணங்களாக 15 சதவீதமான வேலையை ஊழியர்கள் செய்வதைவிட, இயந்திரங்கள் செய்வது திறம் எனக் குறிப்பிட்டுள்ளது. சற்யோ கம்பனினுடைய பல இலத்திரனியல் சாதனங்கள் தற்போது அதிகளவில் விற்பனை செய்யப்படுவதில்லை என்று ஜப்பானிலுள்ள தொழில்நுட்பவல்லுனர்கள் கூறுகிறார்கள். டிஜிற்றல் கமராக்களும், மொபைல் போன்களும் மிகவும் நட்டமேற்படக் கூடிய வகையில் சற்யோ கம்பனிக்குக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது. மொபைல் போன்களில் மட்டும் 1.55 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இதேவேளை கையடக்கத் தொலைபேசிகளின் உற்பத்தி உலகில் சொனி, பியூஜிட்சூ, டொசிபா, கிற்றாக்கி போன்ற நிறுவனங்கள் கூட மிகவும் நட்ட மடைந்து கொண்டு வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

# லண்டன் பயங்கரம்




அண்மையில் லண்டனில் ஏற்பட்ட குண்டு வெடிப்பால் தற்போது அந்த நகரத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. ஏறத்தாழ 1300 மின் கம்பங்கள் மற்றும் தொலைத் தொடர்புக் கோபுரங்கள் உடைந்து நாசமாகியுள்ளன. இருளில் மூழ்கியிருந்த இந்த நகரம் தற்போது வெளிச்சத்துக் வரத் தொடங்கியிருக்கிறது. போக்குவரத்துப் பாதைகள் மற்றும் தொலைத்தொடர்புச் சீராக்கல் பணிகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இந்த நேரத்தில், வீட்டுத் தொலை பேசிகளை விடக் கையடக்கத் தொலைபேசிகளே அதிகம் பயன்படுத்தப்பட்டு, வாடிக்கையாளருக்குச் சேவை வழங்கியதாகவும் கூறப்படுகிறது. மேலே காணப்படுகின்ற தொலைத் தொடர்புக் கோபுரங்களைவிட்டு, நிலத்துக்கு கீழே தொலைத் தொடர்புக் கேபிள்களைப் போட்டால் என்ன என்று அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருப்பதாக லண்டன் அரசாங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால்·சுரங்கங்களில் நடத்தப்படும் தாக்குதல்களின் மூலம் இத்தகைய கேபிள்களின் பாதுகாப்பு, கேள்விக்குறிதான்.

# அரசாங்கத்தின் இனவாத தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்!

## தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்

கிளிநொச்சி—

இலங்கை அரசின் இனவாத தரப்படுத்தலால் தமிழ் மாணவர்களின் கல்வி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு கல்வி மேம்பாட்டு நிறுவகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மொழி மூலக்கல்வியின் அடித்தளத்தையே தகர்த்தழிக்கும் நோக்கோடு, பல்வேறு வழிகளில், பல்வேறு மட்டங்களில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

ஆரம்ப காலம் தொடக்கம் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததெனச் சொல்லப்பட்ட காலம் வரை - தமிழர்கள் கல்வியிலே உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறோம். வேலை வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம்.

ஆனால் தற்போது அந்த நிலைகள் எல்லாம் மாறி, இன்றைக்கு நாங்கள் எங்கு இருக்கிறோம் எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு தேவை இருக்கிறது.

1970 ஆம் ஆண்டுகளிலே இனவாதத் தரப்படுத்தல் மூலம், தமிழ் மாணவர்களது பல்கலைக்கழக நுழைவுக்கு உலைவைத்த இலங்கை ஆட்சியாளர்கள் - அதனோடு நின்று விடாது, தமிழ் மொழியிலே கல்வியின் அடித்தளத்தை தகர்த்தழிக்கும் நோக்கோடு - பல்வேறு வழிகளில், பல்வேறு மட்டங்களில், பல்வேறு அழிவு நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

கல்விப்புலத்தில் எல்லா மட்டங்களிலும் தமிழ் மொழி மூல ஆளணிப்பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது. கல்விச் செயற்பாட்டில் உயர்பீடமாகச் செயற்படும் மத்திய கல்வி அமைச்சில், தமிழ் மொழி மூல ஆளணிப் பற்றாக்குறை என்பதை விட, ஆளணி இல்லை என்று கூறக்கூடிய நிலையே இருந்து வருகிறது.

தமிழ்மொழி மூல கல்வியிலே வெவ்வேறு மட்டங்களிலும் செயற்பட்டு வரும் கல்வி அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எழுதுநர்கள், சிற்றூழியர்கள் போன்ற ஆளணிகளின் பணியமர்த்தங்களை நிறுத்தியும், கட்டுப்படுத்தியும் வரும் இனவாத அரசு -

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான பாடநூல்கள், உபகரணங்கள், ஆசிரியர் கைந்நூல்கள் போன்றவற்றை உரிய காலங்களில் வழங்காது, மாணவர்கள் பௌதீக பங்கீட்டை திட்டமிட்டுப் புறக்கணித்து - தமிழ்ப் பகுதி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்றன ஆளணி பௌதீகவளப் பற்றாக்குறைகளை பாராமுகமாக விட்டும், தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை மழுங்கடித்தும் விடுகின்றநிலை தொடர்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு!

மன்னார்—

மன்னார் - கொந்தைப்பிட்டிப் பகுதியில் இரண்டு படகுகளில் இருந்தும், வீடொன்றில் இருந்தும் பெருந்தொகையான வெடிமருந்துப் பொருட்களும், கிளைமோர் குண்டுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் மன்னார் - கொந்தைப்பிட்டிப் பகுதியில் கரைசேர்ந்த படகொன்றைப் பொலிஸார் சோதனையிட்ட போது, அதில் வெடிமருந்து உட்பட பல பொருட்கள் காணப்பட்டன.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் - மூன்று பேரை பொலிஸார் கைது செய்ததுடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவையும், சாரதியையும் கைதுசெய்தனர்.

இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் - வீடு ஒன்றுக்குச் சென்று வெடிமருந்துப் பொருட்களை மீட்டதுடன், வீட்டிலிருந்த தாயையும், மகனையும் கைது செய்தனர்.

பொலிஸாரின் இந்த திடீர் நடவடிக்கை மூலம் - பெருமளவான வெடிமருந்துப் பொருட்கள், 16 கிளை மோர் குண்டுகள், 2 றிமோட் கொன்றோல்கள், 137 மீற்றர்நீளமான வயர்கள், வெடிக்க வைக்கும் கருவிகள், பற்றறி ஒன்று, கையடக்கத் தொலைபேசிகள் மூன்று என்பன கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக தங்கையா சகாயநாதன், சவரிமுத்து செல்வம், அற்புதசிங்கம் சுகந்தன், குருசாமி கமலாவதி, குருசாமி சிறிதரன், கறுப்பையா பிரகாஸ், சித்திரவேல் குணசீலன் ஆகியோரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை - மன்னாரில் சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாக வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.ஆர். தித்தவெல தெரிவித்தார்.

இத்தகைய சக்திவாய்ந்த மேலும் ஒரு குண்டு மன்னாருக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்தக் குண்டுகளை மன்னாரில் இருந்து வேறொரு பகுதிக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் கிடைத்துள்ளன.

கைக்குண்டுகளுடன் கைது செய் யப்பட்ட சந்தேகநபர்கள் - மன்னார் மஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்படயிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கால்நடை சுகாதார மருத்துவ பணிமனை கிளிநொச்சி மாவட்டத்தில் திறந்து வைப்பு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி - மாவட்டத்துக்கான கால்நடை உற்பத்தி சுகாதார மருத்துவ பணிமனை கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி.கௌரிசங்கர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வன்னி வேளான் தொழில் நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் குலம் ஏற்றிவைத்தார். விழாச்சுடரை யாழ்ப்பாண கால்நடை உதவிப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள் உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கால்நடை மருத்துவப் பணிமனையின் பெயர்ப்பலகையை வவுனியா கால் நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள மருத்துவர் எஸ்.சிவநாதன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பணிமனைக் கட்டடத்தை வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தித்திணைக்களப் பணிப்பாளர் கே.சிவலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை மருத்துவர் திருமதி.கௌரிசங்கர், மருத்துவர் எஸ்.சிவநாதன், மருத்துவர் பி.இராமநாதன், நிகொட் பணிப்பாளர் கே.பார்த்தீபன், உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி.சீ.ஆனந்தராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் கே.சிவலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிக்கொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள அலுவலகத்துக்கான விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்குப் பிரதேச மாணவர்களுக்கு இராமகிருஷ்ண மிசன் சைக்கிள்கள் அன்பளிப்பு

ஆழியவளை—

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிசன் 21 சைக்கிள்களை இலவசமாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்ம கணானந்த ஜி.மகராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்.

வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

(122)

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜுலை - 19

1848 : அமெரிக்க அரசியல் சட்டத்தின் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு அடித்தளமாயமைந்த பெண்ணுரிமை இயக்கத்தின் முதல் மாநாடு நியூயோர்க்கின் செனகா ஃபால்ஸில் நடைபெற்றது. பெண்களுக்கு சொத்துரிமை, வாக்குரிமை, சமவாய்ப்பு முதலியவற்றை வலியுறுத்தும் பிரகடனம் ஒன்று இந்த மாநாட்டில் முன்வைக்கப்பட்டது.

1900 : தனது நாட்டில் தோன்றியுள்ள பொக்ஸர் கிளர்ச்சியில் மத்தியஸ்தம் செய்யும்படி - பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சீனச் சக்கரவர்த்தி கேட்டுக் கொண்டார்.

1907 : ஜப்பான் நிர்ப்பந்தம் காரணமாக கொரிய மன்னர் தனது மகனுக்கு அரசுரிமையைக் கொடுத்துவிட்டு, பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இதனைத் தொடர்ந்து கொரியா முழுவதும் ஜப்பானிய எதிர்ப்புத் தொடங்கியது.

1917 : ஜேர்மனிய நாடாளுமன்றமான ரெயிச் ஸ்டாக் ஜேர்மனிக்கு மற்ற உலக நாடுகளின் பகுதியைக் கைப்பற்றும் எண்ணம் கிடையாது. ஜேர்மனிய சமாதானத்தையே விரும்புகிறது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

卐 : பின்லாந்து நாடாளுமன்றம் சுயாட்சி பெற்றதாக அறிவித்தது.

1918 : பெலிஸ் நாடு ஜேர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தது.

卐 : ருமேனியா, அவுஸ்ரேலியா நாடுகளிலிருந்து கைது செய்யப்பட்ட போர்க் கைதிகளைக் கொண்டு, ஒரு தனிப்படைப் பிரிவை அமைக்க இத்தாலி - ருமேனியன் செயற்குழு ஒன்றை அமைத்தது.

卐 : பணிபுரி அல்லது போர்புரி என்ற சட்டம் அமெரிக்காவில் நடைமுறைக்குவந்தது.

1919 : பிரிட்டனில் அதிகாரபூர்வமாக சமாதான நாள் அறிவிக்கப்பட்டது. நாடெங்கும் சமாதான வெற்றித்திருவிழா அணிவகுப்புகள் நடைபெற்றன.

1920 : பத்து நாட்களுக்குள் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்று, நேசநாடுகள் துருக்கிக்கு காலக்கெடு விதித்தன.

1940 : பிரிட்டனுடன் சமாதானம் செய்து கொள்வதாக ஹிட்லர் அறிவித்தார்.

1943 : இரண்டாம் உலகப் போரில் முதன் முதலாக அமெரிக்கா - ரோம் நகர் மீது தாக்குதலை ஆரம்பித்தது. 500 இற்கும் மேற்பட்ட குண்டு வீச்சு விமானங்கள் இந்தத் தாக்குதலில் பங்குபற்றின.

1952 : 15 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பின்லாந்தில் ஹெல்சிங்கி நகரில் ஆரம்பமாகியது. இதில் 69 நாடுகளைச் சேர்ந்த 4407 வீரர்களும் 518 வீராங்கனைகளும் கலந்து கொண்டனர். பிரான்ஸைச் சேர்ந்த பெர்னாட் மாலி ராய்னே என்ற 14 வயது வீரர் - தங்கம் வென்று இளவயது சாதனையாளர் என்று புகழ்பெற்றார்.

1976 : சீனாவில் ஹோப்பே மாநிலத்தில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தில் ஏறக்குறைய 650 000 பேர்வரை பலியானார்கள்.

1993 : பாகிஸ்தானில் தேசிய சட்டசபையைக் கலைத்துவிட்டு, அதிபர் இஷாக்கானும், பிரதமர் நவாஸ் ஷெரிபும் பதவி விலகினர்.

卐 : ஜப்பானில் 38 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த லிபரல் ஜனநாயகக் கட்சி தேர்தலில் தோல்வியடைந்தது.

1994 : வியாழன் கிரகத்தில் ஷூமேக்கர் லெவி - 9 இன் மூன்றாவது துண்டு மோதியது. இதனால் வியாழன் கிரகத்தில் ஏறக்குறைய நமது பூமி அளவுக்கு வட்டமான பள்ளத்தை இந்த மோதல் உருவாக்கிவிட்டது. கண் போன்ற அமைப்புடன் இந்தப் பள்ளம் தோன்றுவதை ஹப்பிள் தொலை நோக்கு அனுப்பிவைத்த ஒளிப்படங்கள் காட்டின.

தொகுப்பு - சந்துரு

## ஆள் அடையாள அட்டைகள் ஒரு தொகுதி வந்துள்ளன!

வடமராட்சி—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது, தமது ஆட்பதிவுத் திணைக்கள அடையாள அட்டைகளை இழந்தவர்கள், நடமாடும் சேவையின் போது புதிய ஆள் அடையாள அட்டை பெற விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களில் ஒருபகுதியினருக்குரிய ஆள் அடையாள அட்டைகள் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்துள்ளன.

(21)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் - இன்று காலை 10.30 மணிக்கு, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ரீ.ஜெயசீலன் தலைமையில், உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அரச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(21)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## திருமலை சம்பவங்களின் சூத்திரதாரிகள்...

திருகோணமலையில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் கொலைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கும், தென்னிலங்கையில் முக்கிய அரசியற்கட்சி ஒன்றுக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் உள்ளதாகவும், இந்த அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தைச்சேர்ந்த சில கீழ்நிலை அதிகாரிகள் சிலரைத் தம் வசமாக்கிக்கொண்டு அவர்களின் ஆதரவுப் பின்னணியுடனேயே திருமலையில் குழப்பத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வன்முறைச்சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்குறிப்பிட்ட அரசியற்கட்சிக்கும், இராணுவக் கடைநிலை அதிகாரிகள் சிலருக்குமான இரகசியத்தொடர்புகள் குறித்தும், அவர்களின் ஒன்றிணைந்த சமாதான விரோத செயற்பாடுகள் குறித்தும் அரச புலனாய்வுத்துறை ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்றுள்ளதாகவும், அது குறித்து மேற்படி புலனாய்வுப் பிரிவினர் அரசுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து, இந்த விடயம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வரசியல் கட்சியின் உள்நோக்கமானது விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையே மீண்டும் மோதல் நிலையைத தோற்றுவித்து - சமாதான முயற்சிகளின் எதிர் காலத்தை முற்றாகச் சிதையவடையச் செய்து, அதனூடாக பேரினவாத வெறியர்களின் ஆதரவை தென்பகுதியில் பெற்றுக்கொள்வதன் மூலம் அரசியல் ஆதாயங்களை சுருட்டிக்கொள்வதே ஆகும்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு குறித்த விவகாரத்தில் அரசுடன் கருத்து முரண்நிலையை ஏற்படுத்திக்கொண்டு, அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டு வெளியேறி - தம்மைத்தாமே பௌத்த சிங்கள மக்களின் இரட்சகர்களாக இனங்காட்ட முயன்ற அந்தக் கட்சியினர், ஆரம்ப முதலே சமாதான முயற்சிகளை முற்றாக எதிர்த்தும், நோர்வே அனுசரணையாளர்களைக் கடுமையாகக் கண்டித்தும், விமர்சித்தும் வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமாதான முயற்சிகளை முற்றாக எதிர்த்து, நிராகரிக்கும் மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்டு - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற சந்தர்ப்பவாதக் கூட்டணியை ஜனாதிபதி உருவாக்கியபோது - இப்போது எந்தக் கட்சியை திருமலைக் குழப்பங்களுக்கு பின்னணியாக இயங்கியது என அரசு சந்தேகப்படுகின்றதோ, அந்தக் கட்சியுடனேயே உடனபாடு காணவேண்டியிருந்தது குறிப்பிடவேண்டிய உண்மையேயாகும்.

அப்போது அரசியல் சுயநலத்துடன், சமாதான விரோதக் கூட்டணி ஒன்றை உருவாக்க, தொலைநோக்குச் சிந்தனையற்ற முறையில் அவரால் கொலைகாரர்கள் என வர்ணிக்கப்பட்டவர்களுடன் உடன்பாட்டை ஏற்படுத்தி வரலாற்றுக் குற்றம் ஒன்றைச் செய்த ஜனாதிபதி - இப்போது அதன் பலனை அறுவடை செய்யத்தொடங்கியுள்ளார் என்பதையே அரச புலனாய்வுப் பிரிவினரின் கண்டுபிடிப்பானது தெளிவாக்கியுள்ளது எனலாம்.

கடந்த சில மாதங்களாகவே கிழக்கு மாகாணத்தை, அதிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் ஜே.வி.பியினர் சிங்கள இனவாதத்தைத் தூண்டும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தபோது, அரசு அதனை எந்த விதத்திலும் தடுக்க முயன்றதில்லை. மாறாக அத்தகைய நடவடிக்கைகளுக்கு மௌன ஆதரவை வழங்கிக்கொண்டிருந்தது என்றே கூறவேண்டும்.

சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல் முதல், புத்தர்சிலை விவகாரம் வரை சகல நடவடிக்கைகளின் பின்னணியிலும் ஜே.வி.பியினரின் மறைகரம் இருக்கவே செய்தது. இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் சமாதான விரோத நடவடிக்கைகளாகவும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே மோதல் நிலையைத் தோற்றுவிக்கும் உள்நோக்கம் கொண்டவையாகவோ இருந்தபோதும்கூட, அப்போது அரசோ, ஜனாதிபதியோ அதனைக் கண்டிக்கவோ, தடுக்கவோ முயலவில்லை.

ஒருபுறம் அரசுக்குள்ளிருந்தே அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணம் - இராணுவத் தரப்புக்குள் ஊடுருவல்களை மேற்கொண்டு அதற்குள் தமக்கு ஆதரவான சக்திகளை வளர்த்தெடுத்தபோதும் கூட - ஜனாதிபதி அது தனக்கு ஆபத்தான சூழலைத் தோற்றுவிக்கும் எனச் சிந்திக்கவில்லை.

இப்போது வெள்ளம் தலைக்குமேல் போய்விட்ட நிலையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுகின்றார்! இதுதான் வேடிக்கையாக உள்ளது.

திருமலைச் சம்பவங்களுக்குக் காரணம் யார் என்பதைக் கண்டுபிடித்துக் கூறிய புலனாய்வுத்துறையினர், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்த்தேசிய உணர்வாளர்களுக்கும் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்தும் விடுத்த வண்ணம் படுகொலைகளை மேற்கொண்டுவரும் அதே இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் நெறிப்படுத்தலில் இயங்குவதாகக் கூறப்படும் - தமிழ் ஆயுதக்குழுக்களான துணைப் படையினரை இன்னமும் இனங்காட்டத் தயங்குவதும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குவதும் ஏன்? என்ற கேள்வி தமிழ் மக்கள் அனைவரது மனதில் எழவே செய்கிறது.

இதற்கான விடை ஒன்றும் இரகசியமானதல்ல...

மட்டக்களப்புச் சம்பவங்களும் - சமாதானத்துக்கு விரோதமான சக்திகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் நோக்கமும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் போர் நிலையை ஏற்படுத்துவதேயாகும்.

ஆனால், அந்தச் சக்திகளை புலனாய்வுத்துறை இனங்காட்டத்தயங்குகிறது அல்லது விரும்பாது உள்ளது என்றால் அதற்குப் பின்னால் வெளியிட முடியாத பல அரசியல் தந்திரோபாயங்கள் உள்ளன.

எதுவானாலும், அரசும்-ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டாலும் சரி, மறுத்தாலும் சரி - இன்று கிழக்கில் மையம் கொண்டு நிற்கும் போர்ச்சூழலுக்கு முக்கிய காரணிகளாக அரச படையினரும், துணைப்படையினரும், சிங்கள பௌத்த பேரினவாத அரசியற்கட்சிகளுமே உள்ளன என்ற உண்மையில் ஒரு பகுதியை அரச புலனாய்வுத்துறை ஒப்புக்கொண்டுள்ளது என்பதற்கு முதலில் சொல்லப்பட்ட செய்தி ஆதாரமாகியுள்ளது.

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# 'அப்பத்துக்கு மாப்புளிப்பது' போல அரசியல் கெடுபிடிகளும் உதவுகின்றன!

"மாப்புளிக்கிறது அப்பத்துக்கு நல்லது" என்று நம்மூரப் பழமொழி ஒன்றிருக்கிறது உமக்குத் தெரியுமா? எனக் கேட்டபடி வந்தமர்ந்தார் பரமசிவம்.

இன்றைக்கென்ன பழமொழியுடன் வருகிறீர் என்று கேட்டேன்.

புதுமொழி உருவாக்கத்தான் வேண்டும். அதற் காகத்தான் பழமொழி சொன்னேன். சில தினங்களுக்கு முன் ஆர்.எம்.பி.சேனநாயக்கா என்பவர் எழுதிய ஒரு கட்டுரை இனவாதப் பத்திரிகையான ஜிஜலன்டில் வெளி வந்திருந்தது. இதுபற்றி நான் குறிப்பிட்டிருந்தது உமக்கு நினைவிருக்கும். கொசோவாவை உதாரணங்காட்டி, பொதுக்கட்டமைப்பில் சிங்களவர் பிடிவாதங் காட்டி முரணாக நடந்தால், சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் அந்தக் கட்டுரையில் தெரிவித்திருந்தார். இதை நான் இந்தப் பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தேன். இப்பொழுது அரசியல் விவகார அமைச்சரும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான டி.யூ. குணசேகராவும் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். உலக சட்டம் 25.1 சரத்தின்படி மனிதாபிமான முறையில் நிர்க்கதியானோருக்கு அரசு மூலமாகவல்ல, எப்படியும் உதவ முடியும். இதன் அடிப்படையிலேயே இந்தியா யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களை விமான மூலம் வீசியது. எனவே புலிகளுக்கு எவரும் நேரடியாக உதவிகளை வழங்கமுடியும். இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தமே நேரடியாக உதவிகள் வழங்குவதைத் தடுத்துள்ளது என்று ஒரு வைபவத்தில் பேசுகையில் எடுத்துக்காட்டியிருக்கிறார். இதனால்தான் பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக "அந்தப் பக்கத்தில்" எதிர்ப்புகள் வளருவதும், வலுப்பதுவதும், சமாதான முயற்சிகள் பின் தள்ளப்படுவதும் நமக்கு நல்லதென்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் "மாப்புளிப்பது அப்பத்துக்கு நல்லது" என்று சொன்னேன். புரிகிறதா? என்று கேட்டார் பரமசிவம்.

நீர் இன்னொரு செய்தியைக் கவனித்தீரா? என்று பரமசிவம் தொடர்ந்து கேட்டார். பின்னர் அவரே அதையும் சொன்னார். திருகோணமலையில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்குத் தென்னிலங்கையிலுள்ள முன்னணி அரசியல் கட்சியொன்று, பின்னணியிலிருந்து செயற்படுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் அரசாங்கம் தனது முழுக்கவனத்தைச் செலுத்துவதாகத் தெரிகிறது என்று, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகை தெரிவிக்கிறது.

புலிகளுக்கும், அரசுக்குமிடையே மோதலை உருவாக்கி, திருகோணமலையில் அமைதியைக் குலைப்பதே இந்த சக்திகளின் பிரதான நோக்கமென்று புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனராம் என்று பரமசிவம் தொடர்ந்து சொன்னார்.

இதேசமயம் திருகோணமலை நிலைமைகள் பற்றி அமைச்சர் டியூ.குணசேகராவும், கம்யூனிஸ்ட் கட்சியின் 6 ஆவது ஆண்டுத் தினக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். "திருகோணமலையில் தற்போதைய பிரச்சினைகளின் சூத்திரதாரிகள், அதன் பின்னணியில் செயற்பட்டவர்கள், திருகோணமலையில் புத்தர் சிலையை அமைத்தவர்கள், அதற்கு நிதியுதவி வழங்கியவர்கள், அரசையும், புலிகளையும் மோதவைத்து, சுகம்காணக் காத்திருப்பவர்கள் பற்றிய அனைத்து விபரங்களும் தற்போது வெளிவந்துள்ளன. இவற்றை வெகுவிரைவில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கும் பகிரங்கப்படுத்துவார்" என்று அமைச்சர் கூறியிருக்கிறார் என்று நான் சுட்டிக்காட்டினேன்.

இதுவும் "மாப்புளித்ததால்" வந்த நன்மையென்றே நினைக்கிறேன்.

இப்போது திருமலைச் சம்பவங்களின் உண்மை வெளிவந்திருக்கிறது. இதேபோல் மட்டக்களப்புப் பகுதியில் கருணாகுழு என்ற பெயரில் நடந்த, நடக்கின்ற சம்பவங்களின் உண்மைகளையும் - புலனாய்வுத்துறையினர் தம்மவர் சம்பந்தப்பட்டிருந்தாலும்கூட, வெளிக்கொண்டுவந்தால் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வந்துவிடும் என்று சொல்லிக்கொண்டே நடந்தார் பரமசிவம்.

# விந்தையான தீர்ப்புகள்!

## வாசகர்நோக்கு

ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம், யாழ். மாவட்டத்தில் பல வருடங்களாக சகல கிரிக்கெட்கழகங்களுக்கும், சில வருடங்களாக ஜொலிஸ்டார் கிண்ணத்தை பல தடவைகள் வென்றெடுத்த சில கழகங்களை பார்வையாளராக மாற்றி நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிஆட்டத்தில் யார் வெற்றிபெற்றார்கள் எனபதை யாராவது விடயம் தெரிந்தவர்கள் எமக்கு எடுத்துக்கூறுவார்களா?

ஒரு ஓட்டம் பெற்றால் சமநிலையும், இரண்டு ஓட்டங்கள் பெற்றால் வெற்றியையும் எதிர்பார்த்து இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய அணி 9 விக்கெட்டுகளை இழந்து 235 ஓட்டங்களை 37 (40) ஓவர்களில் எடுத்திருந்தது. இவ்வேளையில் பந்து வீசிய சுழற்பந்து வீச்சாளர் வீசிய பந்து துடுப்பாட்டக் காரரின் தலைக்குமேலால் சென்று விக்கெட்காப்பாளரையும் தாண்டிச்செல்ல, துடுப்பாட்ட அணியினர் ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொள்ள, நடுவர் அகலப்பந்தென்று சைகை காட்ட, துடுப்பாட்ட அணியினர் ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றார்கள் என்று சகலரும் எண்ணினோம்.

ஆனால் நடுவரோ மற்றைய அணியினரின் வேண்டுகோளுக்கிணங்க கடைசியாக வீசிய பந்தை கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டாமென சைகை செய்து, ஆட்டத்தைத் தொடருமாறு துடுப்பாட்ட அணிக்கு (அவர்கள் ஆட்சேபித்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாமல்) பணித்தார். பார்வையாளராகிய எமக்கு நடந்துகொண்டிருப்பது என்ன வென்று புரிய முன்னரே அடுத்துவீசப்பட்ட பந்தில் துடுப்பாட்டக்காரர் ஆட்டமிழந்ததாக நடுவரால் தீர்ப்பு வழங்கப்பட் டது.

இந்தச் சூழ்நிலையில், எல்லோரும் குழம்பிய நிலையில், இந்தப் போட்டிக்கு நியமிக்கப்பட்ட தீர்ப்பாளரின் பக்கம் எம்பார்வை திரும்பியது. பல நிமிட ஆழமான ஆராய்வுக்குப் பின் தீர்ப்பாளரோ நடுவரின் தீர்ப்பை ஏற்று, துடுப்பாட்ட அணியினர் ஆட்டத்தைத் தொடர்ந்ததாலும், களத்தில் நடந்தவற்றிற்கு தாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதாலும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிக்கு வெற்றி என்று தீர்ப்பளித்தார்.

பார்வையாளராகிய நாம் கேட்பது :

ஒரு நடுவர் ஒருங்கிணைந்து செயற்பட மறந்த ஒரு கணப்பொழுதில் செய்த ஒரு நுட்பத் தவறை மற்ற நடுவர் உடன் செயற்பட்டு தடுக்க வாய்ப்பிருந்தும் செயற்படாதிருந்தது ஏனோ?

துடுப்பாட்டம் களத்தில் தான் நடை பெறும். தீர்ப்பாளர் - ஆட்சேபனைக்குத் தீர்வுதரா மல் களத்தில் நடந்தது முடிந்தகதை என்பதைக்கூறவா?

நடுவர் தவறு செய்தபோது அருகில் இருந்து நடுவரைக் குழப்பிய களத்தடுப்பாளர் ஒரு நடுவர் என்பதோடு, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் மத்தியஸ்தர் குழுவின் செயலாளர் என்பதால்தான் நடுவர் நிலைதடுமாறினாரா?

வெற்றிபெறாது வெற்றிபெற்ற அணியினர் கிரிக்கெட் ஆட்டத்தின் புனிதத் தன்மையை உணர்ந்து, உண்மையாக வெற்றிபெற்ற அணியினருக்கு வெற்றிக்கிண்ணத்தை விட்டுக்கொடுக்க நினைக்காதது ஏனோ?

யார் எமக்குப் புரிய வைப்பார்கள்?

பவித்திரன்
கிரிக்கெட் ரசிகன்
யாழ்ப்பாணம்

அரசியற் கட்டுரை...

சிலம்பு

# இஸ்லாமிய இளைஞர்களின் சிந்தனைக்கு!



மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட பின்பு, சிங்களப் பேரினவாதம் தனது காலைப்பரப்பிய இடம் தென் தமிழீழமாகும். தென் தமிழீழத்தின் தமிழ்ப் பகுதிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் அபகரிக்கப்பட்டன. இதனால், பாதிக்கப்பட்டவர்களில் இஸ்லாமிய மக்களும் அதிக அளவில் அடங்குவர் . இந்தக் குடியேற்றத்திட்டத்தால் ஏற்பட்ட பேராபத்தை எதிர்த்துக் குரல் எழுப்பியவர் தந்தை செல்வாவே ஆவார்.

ஆனால், இந்தக் கால கட்டத்திலும் சரி, பின்னரும் சரி இந்த ஆபத்தைப் பற்றிக் கவலைப்படாமல் சிங்களப் பேரினவாதிகளுடன் ஒட்டி இருந்தவர்களில் எம்.சி.எம். கலீல், டீ.பி ஜாயா போன்ற முஸ்லிம் தலைவர்கள் அடங்குவர். இதேபோன்று சி.சுந்தரலிங்கம், ஜீ.ஜீ பொன்னம்பலம், நல்லையா, நடேசபிள்ளை ஆகிய தமிழ் அரசியல் வாதிகளுமடங்குவர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் அபாயத்தையும், தொடரப்போகும் சிங்கள மொழித் திணிப்பையும் எதிர்த்துப் போராடத் தந்தை செல்வா தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டார்.

1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இந்த ஒற்றுமையை அவரால் ஏற்படுத்த முடிந்தது. மதத்தால் இஸ்லாமியராக இருந்த முஸ்லிம்களை, மொழியால் ஒன்றிணைத்துச் சிங்களத்துக்குத் தமிழரின் ஒற்றுமையை எடுத்துக் காட்டினார். ஆனால் சிங்கள அரசுகளும், அவற்றுடன் இணைந்திருந்த இலங்கை வாழ் முஸ்லிம்களும் இந்த ஒற்றுமையை உடைப்பதிலேயே அக்கறை காட்டினர். இதில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த முஸ்லிம் அரசியல் வாதிகளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து முஸ்லிம் அரசியல் வாதிகளும் ஒரே கொள்கையையே கொண்டிருந்தனர். சிங்கள பௌத்த மேலாண்மையைப் பற்றிக் கவலையின்றி அவர்கள் பட்டதெல்லாம் தங்களின் தலைமை பற்றியதாகவே இருந்தது. அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் ஆயுள்காலத் தலைவராக எம்.சி.எம் கலீல் இருந்தார். இலங்கை சோனகர் சங்க ஆயுள் காலத் தலைவராக சேர்.ரசீக். பரீத் இருந்தார். இவர்களைவிட ஐக்கிய தேசியக் கட்சியில் பீ.பி. ஜாயா, ஏசி.எஸ்.ஹமீட், எம்.எச் மொகமட் போன்றோரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பதீயுதீன் மஃமூத், அலவி மௌலானா, பௌசி போன்றோரும் இருந்தனர். இவர்கள் முஸ்லிம்களின் தலைவர்களாக்க் காட்சியளிக்க விரும்பினர். சிங்களக் கட்சிகளில் இணைந்திருந்து கொண்டு, இஸ்லாமிய மக்களை உள்ளடக்கிய தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்துச் சட்டங்களையும் ஆதரித்தே வந்தனர். இந்தக் கால கட்டத்தில் தான் காரியப்பர், முஸ்தப்பா, அப்துல் மஜித் ஆகியோரை முஸ்லிம்களின் உறுப்பினர்களாகத் தமிழரசுக் கட்சி மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவதற்குத் தந்தை செல்வா வழியாண்டார்.

ஆனால், அவரது இந்த ஒற்றுமை முயற்சிக்குப் பேரினவாதக் கட்சிகள் குழிபறித்துப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டன. இதற்குத்துணை போனவர்கள் பேரினவாதக் கட்சிகளில் இருந்த முஸ்லிம் அரசியல் வாதிகளேயாகும். தமிழரசுக் கட்சி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறினர். இவ்வாறே பின்னர் எம்.ஈ.எச் முகமதலியும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டார். அதன் பின்னர் எம்.சி.அகமது, மசூர் மௌலானா போன்றோர் ஆளும் சிங்களக் கட்சிகளுடன் சங்கமமாகினர். பீபி ஜாயா போன்ற பழைய ஐ.தே.கட்சிப் பிரமுகர்களின் நெருக்குதல்கள், அழுத்தங்களாலேயே தாங்கள் பேரினவாதக் கட்சிகளில் சேர்ந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார், எம்.சி. அகமது - தந்தை செல்வாவின் பணியைத் தொடராமல் விட்டதையிட்டு வருத்தப்பட்டுள்ளார் மசூர் மௌலானா.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டத்திலும், பின்னர் 1961 ஆம் ஆண்டில் கச்சேரியின் முன் நடந்த மறியற்போராட்டத்தில் பல்லாயிரம் இஸ்லாமிய மக்கள் பங்கு பற்றியது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். இந்த ஒற்றுமை - சிங்கள ஆட்சியாளருக்குப் பெரும் திகிலை ஏற்படுத்திற்று. மொழியால், தமிழால் ஒன்றிணைந்துள்ள மக்களை மதத்தை வைத்துப் பிரிப்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டினர். அதில் வெற்றியும் கண் டனர் என்று தான் கொள்ள வேண்டும். ஆளும் கட்சிகளுடன் இணைந்து, அமைச்சர் பதவிகளைப் பெறுவதால் இனத்தின் உரிமைகளை அடகு வைக்க முடியுமேயன்றி, விடுதலை பெறமுடியாது என்பது தந்தை செல்வாவின் கொள்கை.

அமைச்சர் பதவிகளைக் கொடுத்து, இன ஒற்றுமையைச் சிதறடித்தனர் ஆட்சியாளர்கள். இவ்வாறு முஸ்லிம் அரசியல் வாதிகள் பதவிகளுக்கு ஆசைப்பட்டுப்போனதால், உரிமைகளை மறந்து போனது மட்டுமன்றி, ஆட்சியாளர்களின் தமது இனத்தின் மீதான தாக்குதல்களைக் கண்டிக்கக் கூடத் திராணி அற்றவர்களாக இருந்தனர். புத்தளம் நகரிலிருந்து, பள்ளிவாசலில் அத்துமீறி நுழைந்த பொலிஸார் சுட்டதில், மத வழி பாட்டிலிருந்த இஸ்லாமியர்கள் பலியாகினர். அங்கு குருதி ஓடியது. இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை எந்தமுஸ்லிம் தலைமையும் கண்டிக்கவில்லை. ஆனால் தந்தை செல்வா மிகவும் வன்மையாகக் கண்டித்ததுடன், தனது தள்ளாத வயதிலும் உடனே புறப்பட்டுப் புத்தளம் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். நாடாளுமன்றத்திலும் கண்டனக் குரல் எழுப்பினார். இதையெல்லாம் பார்த்தும் வாளாயிருந்த சிலர் தமிழ்த்தலைவர்கள், முஸ்லிம் மக்கள் மேல் குதிரை ஓட முயற்சிக்கின்றனர் என்று கூறுவது எத்தனை தவறான கூற்றாகும்.

இஸ்லாமிய மக்கள் வேறு, தமிழ் மக்கள் வேறு வேறல்ல. தமிழ் மக்களின் விடுதலையே இஸ்லாமிய மக்களின் விடுதலையுமாகும் என்பது யதார்த்தமாகும். இதைச் சிங்கள ஆட்சியாளர் புரிந்து கொண்டிருப்பதால் தான் பிரித்தாளும் சூழ்ச்சியிலும், ஒருவரை ஒருவர் சந்தேகம் கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டனர்.

மாவட்ட சபைகள் தருவதாக ஒப்பந்தம் செய்த டட்லி சேனநாயக்க அதைக் கைவிட்டு , ஏமாற்றி விட்டு மாவட்ட சபைகள் வெள்ளை அறிக்கையை நாடாளுமன்றில் கொண்டு வந்தார். மாவட்ட சபைகளை எதிர்த்து, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசினர்.

இதன் மூலம் முஸ்லிம் மக்களைப் பிரிப்பதில் வெற்றி கொண்டார். 1972 ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்புக் கொண்டு வரப்பட்ட பொழுது, அதன் பேராபத்தை உணராது சிறிமாவோவுடன் சேர்ந்து இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். தமிழ் மக்களது போராட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. மிதவாத அரசியல் தலைவர்களிடமிருந்த தலைமை, தீவிரவாத இளைஞர்களின் கைகளுக்கு மாறத் தொடங்கியது.

1977 ஆம் ஆண்டில் தந்தை செல்வாவின் மறைவைத் தொடர்ந்து, தமிழ் மக்களது தலைமை விடுதலைப்புலிகளின் வசம் வந்து சேர்ந்தது. 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 'தனித் தமிழீழம்' நிறுவுவதற்கான ஆணை மக்களிடம் கோரப்பட்டது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டணியும் இணைந்து போட்டியிட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கிடைத்தது. த.வி. கூட்டணி மக்களிடம் பெற்ற ஆணையைச் செயற்படுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதேசமயம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துச் செயற்படத் தவறிவிட்டது.

1977 ஆம் ஆண்டில் தேர்தல் முடிந்தவுடன், தமிழ் மக்கள் மேல் இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 1978 ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப்புக் கொண்டுவரப்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது. இலங்கையின் தேசியப் பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலி நியமிக்கப்பட்டார். தமிழினத்தை அடக்கி ஆளப் பலவிதமான அரச பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டார் லலித். இஸ்லாமியர்களின் பரம வைரியான இஸ்ரேலிலிருந்து மொசாட் உளவுத் துறையை வருவித்து உதவி கோரினார். மொசாட்டின் திட்டப்படி, இஸ்லாமியர்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையே திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தி, இரு பகுதியினரையும் மோத வழி வகுத்தனர் அரச கூலிப்படைகள். இஸ்லாமியர்களைத் தாக்கிவிட்டுத் தமிழர்கள் மேல் பழியைப் போடுவதும், அதேபோல் தமிழ் மக்களைத் தாக்கிவிட்டு இஸ்லாமியர்கள் மேல் அந்தப் பழியைப் போடுவதாகவுமிருந்தனர். இதனால் லலித்தின் திட்டம் வெற்றிபெற்றது. தமிழ் - முஸ்லிம் உறவு விரிசலடைந்து, இறுதியில் அறுந்தே போயிற்று. இதேநேரம் இஸ்லாமியத் தலைமை முஸ்லிம் காங்கிரசாக உருவெடுத்தது. ஆட்சியாளர்கள் ஊர்காவற் படை என்ற பெயரில் சிங்கள - இஸ்லாமிய மக்களுக்கு ஆயுதங்கள் கொடுத்தனர். ஊர்க்காவல் படையிலிருந்த முஸ்லிம்கள் தாக்கப்படும் பொழுது, அதை முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களைக் காட்டி விரிசலை வளர்த்தனர். அதேபோன்று புலனாய்வுகளுக்கு இஸ்லாமிய இளைஞர்களைப் பயன்படுத்தினர். இது மேலும் விரிசலை உண்டாக்கியது.

தமிழ் மக்களின் ஆயுதப் போர் வளர்ச்சி கண்ட பொழுது, போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தோர் அரசுடன் துணை நிற்கிறார்கள். துரோகிகளாகக் கணிக்கப்பட்டனர். தமிழர்கள் துரோகிகளாகக் கணிக்கப்பட்ட பொழுது பெரிதாகக் காட்டிக் கொள்ளாதவர்கள் இஸ்லாமியர்கள் கணிக்கப்பட்ட பொழுது பெரிதாகக் காட்டி பிரிவினையை ஏற்படுத்தினர்.

இந்தக் காலத்தில் முஸ்லிம் அரசியல் வாதிகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குளிர் காயத் தொடங்கினர். முஸ்லிம்களின் தேசியம் பற்றிப் பேசினர். முஸ்லிம்களின் தேசியம் பற்றிப் பேசுவது தவறில்லை.

ஆனால், முஸ்லிம்களின் தேசியம் பற்றிப் பேசியவர்கள் சிங்கள ஆட்சியில் அமைச்சர்களானதே விந்தையிலும் விந்தையாக அமைந்தது. ஆளும் கட்சிகள் மாறும் பொழுது, முஸ்லிம் தலைவர்களும் தங்களை மாற்றிக் கொள்வார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அமைச்சுப் பதவிகளை அலங்கரிப்பது ஒன்றே அவர்களது நோக்கமாக இருந்தது. அமைச்சர் பதவிகளின் மூலம் சிலருக்கு உத்தியோகங்களைக் கொடுப்பதும், சில சலுகைகள் மூலம் சிறிய அபிவிருத்திகளைச் செய்தாலும் முஸ்லிம்களின் தேசியத்தை நிலை நாட்டலாம் என்று ஏமாற்றுகின்றனர். இது தான் உண்மையில் முஸ்லிம் மக்களின் மேல் சவாரி செய்வது என்பதாகும்.

உரிமைகளுக்காகவோ, விடுதலைக்காகவோ குரல் கொடுப்பவர்கள் ஆளும் கட்சியில் எவ்வாறு பங்காளிகளாக இருக்க முடியும். கடந்த 60 அல்லது 70 ஆண்டு ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் இதன்படி பார்த்தால், இஸ்லாமிய மக்களின் விடுதலையை எந்த முஸ்லிம் கட்சியும் ஏற்கவில்லை என்பதே பொருத்தமானதாகும். ஆக இஸ்லாமிய மக்களின் விடுதலைக்காக உண்மையில் போராடுபவர்கள் விடுதலைப் புலிகள் என்பது இதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தனித்தரப்பு இடைக்காலத் தன்னாட்சி அலகில் பங்கு, பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திடல் ஆகியவற்றில் முஸ்லிம்களுக்கு இடம்வேண்டும் என்று ஓங்கி ஒலிக்கின்றனர். தமிழ்மக்கள் போராடியிருக்காவிட்டால் பேச்சுவார்த்தை வந்திருக்காது. இடைக்காலத் தன்னாட்சி அலகு தோன்றியிருக்காது. இவ்வாறான நிலையில் இந்த முஸ்லிம் தரப்பினர் என்ன கேட்டிருப்பார்கள்? புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று பெரும் பகுதி உண்டு. இதுவும் தமிழர் தாயகப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. தமிழர் தாயகப் பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தப் பகுதியை சுனாமி அனர்த்தத்திலிருந்து மீள்கட்டுமானம் செய்ய, பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று புலிகள் கோரிக்கை முன்வைத்தனர். உலகம் அந்தக் கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக்கொண்டு, பொதுக்கட்டமைப்பை புலிகளுடன் மேற்கொள்ளுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கட்டமைப்பில் முஸ்லிம்களுக்குரிய இடம் கொடுக்கப்படும் எனவும் புலிகள் உறுதியளித்துள்ளனர். ஆனால், தாங்களும் இதில் கையெழுத்திட வேண்டும் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் கூறிவருகின்றனர். புலிகளின் கட்டுப் பகுதி என்று எதுவும் இல்லாதிருந்தால், பொதுக் கட்டமைப்பைத் திரும்பிப் பார்த்தால், ஆளும் வர்க்கத்தினரின் இன,மத, மேலாண்மை தெரியும். அவ்வாறிருக்கையில் ஆளும் தரப்புடனோ அல்லது எதிர்த்தரப்புடனோ சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவது, அமைச்சர்களாவது தேசியப் பட்டியலில் இடம் பெறுவது என்பன உரிமைகளைப் பெற, எந்தச் சந்தர்ப்பதிலும் உதவமாட்டா.

இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இருப்பார்கள் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இருப்பார்கள். உரிமைகள் பற்றிய சிந்தனையின்றி, பதவிகள் பற்றிய கவனமே அங்கிருக்கும்.

தங்கள் தாயகம் என்று கூறுபவர்கள், தாயகத்துக்காக அறவழியில் அல்லது ஆயுதவழியில் எந்த ஒரு சிறு நகர்வுகளையும் மேற்கொள்வதில்லை. ஆனால், இஸ்லாமிய இளைஞர்களை மதத்தை வைத்து உணர்ச்சி ஊட்டலாம் , தங்கள் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளலாம் என்பதே அவர்களது திட்டமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம், தமிழ் மக்களது விடுதலைக்கான போராட்டம். தமிழ் மக்களது என்றால் இஸ்லாமிய மக்களையும் விடுதலைபெற வைப்பதற்கான போராட்டமே விடுதலைப் புலிகளின் போராட்டமாகும்.

தமிழர் தாயகம் என்பது இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பகுதிகளாகும். இந்தத் தாயகப் பிரதேசத்தில் குழல்பிட்டும், தேங்காய்ப்பூவும் போல் இஸ்லாமிய மக்களும், தமிழ் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, தாயக விடுதலை இஸ்லாமிய மக்களின் தாயக விடுதலையையும் அடக்கியதாகும். இலங்கைத் தீவில் சிங்களப் பேரினவாத ஆட்சியில் பங்குகொள்ளும் எவரும் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்தவர்களல்ல. அவர்கள் கட்டமைப்புப் பற்றிப் புலிகள் பேசியிருக்காவிட்டால், பொதுக் கட்டமைப்புப் பற்றிய சிந்தனையே எழுந்திராது. அவ்வாறான நிலையில் எந்தப் பொதுக்கட்டமைப்பில் தாங்கள் கையெழுத்திட வேண்டும் என்று கேட்பர்? இலங்கை, அம்பாந்தோட்டை, காலி போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கும் பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று இந்த முஸ்லிம் தலைவர்கள் கேட்பார்களா? கேட்கமாட்டார்கள். புலிகள் கேட்பதில் பங்கு கேட்பதில் ஆசை அவர்களுக்கு. ஏனெனில் புலிகளின் தூய்மையான செயற்பாடுகளை உலகம் பார்த்து வியந்து நிற்கிறது. பொதுக்கட்டமைப்பில் புலிகள் மட்டும் கைச்சாத் திட்டால், தாங்கள் இதில் சம்பந்தப்படவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்வர். தங்களின் இருப்புக் கேள்விக் குறியாகி விடும் என்பது யதார்த்தமாகிவிடும்.

இஸ்லாமிய இளைஞர் சமூகம் யதார்த்த நிலையை ஆராய வேண்டும். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமைகளாகிவிடக் கூடாது. முஸ்லிம் தலைமைகள் எவ்வாறு நடந்தால், இஸ்லாமிய சமுதாயம் விடுதலை பெறும் என்பதைச் சிந்திக்க வேண்டும். விடுதலை வேண்டும் என்றால் சிங்களத்துக் கட்சிகளைக் கைவிட வேண்டும். விடுதலைக்குப் போராடுபவர்களுடன் தூய்மையான உறவை வைத்துக் கொள்ள வேண்டும். விடுதலைக்குப் போராடுபவர்கள் தான் பேச்சு வார்த்தை மேசையில் இருக்க முடியும். ஆட்சியாளர் ஒருபுறம், விடுதலைப் போராளிகள் மறுபுறம் இருக்கமுடியுமேயன்றி மற்றவர்களுக்கு அங்கு என்ன வேலை?

தமிழீழம் விடுதலைபெறும் பொழுது, தமிழீழத் தாயகத்தில் வாழும் இஸ்லாமியர்களும் விடுதலை பெறுவார்கள் என்பது உறுதி. இதற்கான பங்களிப்பை இஸ்லாமிய இளைஞர்கள் வழங்க வேண்டும். விடுதலைக்கான இந்தப் பயணத்தில் விடுதலைப் புலிகளுடன் தான் பேசவேண்டும். விடுதலைக்குப் பின் இஸ்லாமிய மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும் என்று கேட்கின்ற உரிமை, இஸ்லாமிய மக்களுக்கே உண்டு. இதைவிடுத்து ஒற்றையாட்சி அரசியலமைப்பையும், அமைச்சுப் பதவிகளையும் வைத்துக் கொண்டு, பேச்சுவார்த்தையில் எவ்வாறு பங்குபற்ற முடியும்? விடுதலைக்கான பயணத்தில் தோளோடு தோள் நின்றால், தமிழீழத்தில் நம்பிக்கை வைத்தால் பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகளோடு, விடுதலை வேட்கை கொண்டவர்களாகப் பங்கு பற்றமுடியும்.

இது இஸ்லாமிய இளைஞர்களின் ஆழமான சிந்தனைக்கு வைக்கப்படுகிறது.

ஸ்பெயினில் பயங்கர காட்டுத் தீ

# கட்டுப்படுத்த முயற்சி செய்த 14 தீயணைப்பு வீரர்கள் மரணம்!



ஸ்பெயின் —

ஸ்பெயினில் பற்றிய காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தீயணைப்பு வீரர்களில் 14 பேர் தீயில் கருகி மரணமானதாக ஸ்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஸ்பெயினின் மத்திய மாகாணத்தில் இடம் பெற்றுள்ளது. காட்டுத் தீயை அணைப்பதற்கு இரண்டு பிரிவுகளாக தீயணைப்புப் படையினர் சென்றதாகவும், இவர்களில் யார் மரணமடைந்தனர் என்று அடையாளம் காணப்படவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் காட்டுத் தீயினால் 8 ஆயிரம் ஹெக்ரேயர் வரையான காட்டுப் பிரதேசம் அழிந்துள்ளதாகவும், இந்தத் தீ பரவலுக்கு காரணம் காற்று எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காட்டுத் தீயையடுத்து நூற்றுக்கணக்கான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளதாக ஸ்பெயின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாத காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு நெருக்கடிகால பிரிவு - பொது மக்கள் அதிகாரசபை, இராணுவம் மற்றும் பொலிஸாரை நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளது. ஹெலிகொப்ரர்கள் காட்டுத்தீ பரவிய இடங் களில், அதனைக் கட்டுப்படுத் துவதற்கு 150 தீயணைப் புப் படையினரை இறக்கியுள்ளன.

இந்தக் காட்டுத்தீ பரவிய இடங்களைப் பார்வையிடுவதற்கு, ஸ்பானிய துணைப் பிரதமர் மரியா தெரசா பெர்னாண்டஸ் சென்றுள்ளார்.

# பாகிஸ்தான் படையினர் தாக்குதல்; 17 கிளர்ச்சியாளர்கள் உயிரிழப்பு!



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானுடன் இணைந்த ஆப்கான் எல்லைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில், 17 பேர் உயிரிழந்ததாகவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டு கிளர்ச்சிவாதிகளென பாகிஸ்தான் படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் தமது தரப்பில் படைவீரர் ஒருவரும் உயிரிழந்ததாகவும் படையினர் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் வடபகுதியிலுள்ள வசிறிஸ்தான் மாகாணத்தின் மிரன்சா என்னுமிடத்திலுள்ள வீடொன்றை நேற்றிரவு சுற்றிவளைத்த படையினருக்கும், அந்த வீட்டிலிருந்த கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே 6 மணி நேரமாக மோதல் இடம் பெற்றதாகவும், இதிலேயே இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இரு பகுதியினருக்குமிடையே மோதல் இடம் பெற்ற வேளை, கிளர்ச்சிவாதிகள், தாம் தப்பிப்பதற்காக, பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்திருந்ததாகவும், இந்த மோதல்களில் அவர்களில் சிலரும் உயிரிழந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலின்போது காயமடைந்த 4 கிளர்ச்சிவாதிகள் கைது செய்யப்பட்டதுடன், பெருமளவு வெடி பொருட்கள் மற்றும் நான்கு பாஸ்போட்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு வசிறிஸ்தான் பகுதியில் 24 கிளர்ச்சிவாத சந்தேக நபர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், இது ஆப்கானில் அமெரிக்க கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த கிளர்ச்சிவாதிகளினுடையதாக இருக்கலாமெனவும் பாகிஸ்தான் படையினர் தெரிவித்தனர்.

# இஸ்ரேல் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுமென அப்பாஸ் தெரிவிப்பு!



இஸ்ரேலிய யூத குடியிருப்புக்கள் மீது நடத்தப்படும் றொக்கட் மற்றும் மோட்டார் தாக்குதல்களை நிறுத்துவதாக பலஸ்தீன ஜனாதிபதி மஃமூட் அப்பாஸ் உறுதியளித்துள்ளார்.

காஸாப்பகுதியில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களையடுத்தே மஃமூட் அப்பாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் குடியிருப்புக்கள் மீது பலஸ்தீனத்திலிருந்து நடத்தப்படும் றொக்கட் மற்றும் மோட்டார் தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டுமெனவும், இல்லையெனில் பலஸ்தீனம் மீது தரைவழித் தாக்குதல் நடத்தப்படுமெனவும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைவதற்கு இஸ்ரேல் காரணமென பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளும், இல்லை பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளே காரணமென இஸ்ரேலும் மாறிமாறி பரஸ்பர குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருகின்றன.


இதேவேளை நேற்று முன்தினம் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் இஸ்ரேலிலுள்ள இரண்டு யூதக்குடியிருப்புக்களை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலில் பல இஸ்ரேலியர்கள் காயமடைந்தனர்.

இதனிடையே காஸாவின் தென் பகுதியில் இஸ்ரேலியக் குடியிருப்புக்குள் புகமுயன்ற பலஸ்தீன கிளர்ச்சிவாதி ஒருவரை தாம் சுட்டுக்கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. அத்துடன் காஸாவின் வடபகுதியில் இஸ்ரேல் விமானப்படையினர் காரொன்றை இலக்கு வைத்து நடத்திய விமானத் தாக்குதலில் காரில் பயணம் செய்தவர் தப்பிவிட்டதாகசம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாக இஸ்ரேல் படையினர் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உள்ளூர் தளபதியான சயீட் சியாம் கொல்லப்பட்டார்.

ஹரிபொட்டர் புத்தகம்

# அமெரிக்காவில் விற்பனையில் புதிய சாதனை படைத்தது!



வொஷிங்ரன்

ஜே.கே.ரவ்லிங் எழுதிய ஹரி பொட்டர் என்ற புத்தகம் அமெரிக்காவில் விற்பனையில் புதிய சாதனை படைத்துள்ளது. இந்தப் புத்தகம் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டு 24 மணிநேரத்தில் 6.9 மில்லியன் பிரதிகள் விற்று அதன் முதல் புத்தக விற்பனையை முறியடித்து அமெரிக்காவில் புதிய சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த சனிக்கிழமை இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டவேளை மணி ஒன்றுக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி, இறுதியில் இந்தச் சாதனையைப் படைத்துள்ளது.

ரவ்லிங்கினால் எழுதி 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓடர் ஒப் த பொனெக்ஸ் (Order of the Phoenix) என்ற புத்தகம் 24 மணி நேரத்தில் 5 மில்லியன் பிரதிகள் விற்றமையே இதுவரை அமெரிக்காவில் சாதனையாக இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட இந்தப் புத்தகம் 24 மணிநேரத்துள் உலகம் முழுவதும் ஒரு கோடி பிரதிகள் விற்பனையாகி உலக சாதனை படைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்தப் புத்தகத்தை வாங்குவதற்கு உலகம் முழுவதும் பலர் முண்டியடித்து வருவதும், அவுஸ்ரேலியாவில் இதற்கென சிறப்பு ரயில் சேவை ஒன்று சேவையில் ஈடுபடுத்தப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

நமது ஈழநாடு
தமிழ் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

இலவச முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்


சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ
சுன்னாகக் கிளை

DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

BOC
ரண் கெகுழு
சிறுவர் சேமிப்புக் கணக்கை மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

யாழ். மாவட்டத்தில்

காலம் : 30.07.2005 (சனிக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை
இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



குமரகுரு
புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971



கிளி. மாவட்டத்தில்

காலம் : 31.07.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணிதொடக்கம் 3.00 மணிவரை
இடம் : கிளி.மத்திய கல்லூரி, பரந்தன் மகா வித்தியாலயம்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..............................
தற்போதைய முகவரி:- ..............................
பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ..............................
மாவட்டம் :- ..............................

அலுவலக பாவனைக்கு
இலக்கம்
மாவட்டம்

..............................  ..............................
பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம்  மாணவர் கையொப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# இரு ஈழத்தமிழர்களின் விடுதலைக்கு இந்திய உச்சநீதிமன்றம் தடைவிதிப்பு!

புதுடெல்கி—

ராஜீவ்காந்தி படுகொலைச் சம்பவத்தில் முக்கிய பங்காற்றியதாகக் கூறப்பட்ட இலங்கைத் தமிழர்கள் இருவர் விடுவிக்கப்படுவதற்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்தது.

இதுதொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள பல்துறை கண்காணிப்புக்குழுவின் தலைவராக இருக்கும், மத்திய புலனாய்வு அமைப்பின் (சி.பி.ஐ) தலைவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், ராஜீவ் படுகொலை வழக்கில் இலங்கைத் தமிழர்கள் இருவரும் விடுவிக்கப்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

மேலும், இந்த இருவர் மீதும் நடத்தப்பட்ட விசாரணைகள் குறித்து இரு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் சி.பி.ஐக்கு உச்சநீதி மன் றம் உத்தரவிட்டது.

இலங்கைத் தமிழர்களான லிங்கம், வசந்தன் ஆகியோர் ராஜீவ்காந்தி படுகொலையில் முக்கிய பங்காற்றியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் சென்னை உயர் நீதிமன்றம் விடுவிக்க ஏப்ரல் 25 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று சி.பி.ஐ இயக்குநர் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறப்பட்டிருந் தது.

முறையான ஆவணம் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு தற்போது அவர்கள் இருவரும் செங் கல்பட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மற்றொரு...

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதென உயர் நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.

## திருமலை...

உரிமைமீறல் எனக் கோரி சீனன்குடா விகாரையின் பிக்கு பியதிஸ்ஸ தேரர் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்தநிலையில் - மனுதாரரின் வாதத்தை நீதியரசர் ஏற்றுக் கொண்டதையடுத்து சட்டமா அதிபர் திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை தாம் விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை - மன்றில் கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா -

குறித்த புத்தர்சிலை விவ காரத்தில் சுயாதீன முடிவை எடுக்க திருகோணமலை நகரசபைக்கு உரிமையுள்ளதாகத் தெரிவித்தார்.

## படையினரின்...

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத் தலைவருக்கும், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினருக்கும் இடையில் நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விடயங்களைத் தெரிவித்ததாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

அத்துடன் - விடுதலைப் புலிகளின் தலைமை போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகக் கடைப்பிடிக்கும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தாங்கள் நேற்றுத் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

## புதிய..

மத்திய மற்றும் சிறியளவிலான பெருந்தோட்டக் கைத்தொழில், கிராமிய மனிதவள அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சராக சி.பி. ரத்னாயக்காவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் கிராமிய தொழிற்துறை உதவி அமைச்சராக சேகு இஸதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் - விவசாய பிரதி அமைச்சராக ஜகத் புஸ்பகுமாரவும் - ஊடகப் பிரதி அமைச்சராக டிலான் பெரேராவும் - சுகாதாரப் பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் ஊவா அபிவிருத்தி பிரதி அமைச்சராக ஜயரத்ன ஹேரந்தவும் -

நீர்ப்பாசன, மகாவலி மற்றும் ரஜரட்ட அபிவிருத்தி பிரதி அமைச்சராக பிரேமலால் ஜயசேகரவும் - மீன்பிடி, நீரியல்வள பிரதி அமைச்சராக சுந்திர சிறி கஜதீரவும் - தொழில் உறவுகள், வெளிவிவகார பிரதி அமைச்சராக மேர்வின் சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## வேம்படி...

வில் காவலரண் ஒன்றை புதிதாக அமைத்துள்ளனர்.

இந்த விடயம் போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில சரத்துக்களை மீறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, வேம்படிச் சந்தியில் இராணுவக் காவலரன் ஒன்று நீண்டகாலமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக, பொதுச் சுடரை ராஜ்குமார் அடிகளார், வலிகாமம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சாம்பசிவம், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவமகாராசா, யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சம்மேளன செயலாளர் சூரியகுமார், தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் தலைமையில் இந்த ஆலோசனைக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்த தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தற்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகள் அரசியல் பணி மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன், போராளிகளின் பயண ஏற்பாடுகளிலும் அரசாங்கம் அக்கறையின்றிச் செயற்படுவது தொடர்பாகவும் - பொதுக்கட்டமைப்பு நிதியம், பிராந்திய செயலகத்தின் தலைமையகம் கிளிநொச்சியில் செயற்படுவதற்கு உயர்நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது குறித்தும் நிகழ்வில் கலந்துகொண்டோர் விசனம் தெரிவித்தனர்.

தமிழர்களுக்கான அபிலாஷைகளையும், சுதந்திரத்தையும் வழங்கும் செயற்பாட்டைக் கைவிட்டு - தற்போது மறைமுக யுத்தமொன்றை சிங்கள தேசம் அவர்கள் மீது திணித்துள்ளது. எனவே, இந்த அரசியல் நெருக்கடி நிலையைச் சுட்டிக்காட்டும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவேண்டுமென்றும் கூட்டத்தில் கலந்துகொண்டோர் வலியுறுத்தினர்.

சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக்கொண்டு - சிங்கள தேசம் தமிழ் மக்களை நசுக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றதென்றும் -

தொடர்ந்தும் அமைதிவழிப் போராட்டங்களை நடத்தி எதிர்ப்புத் தெரிவிப்பதை சிங்கள தேசம் கருத்தில் எடுக்காததால் உடனே போரைத் தொடங்க

## ராணுவ, பொலிஸ்...

தேசிய புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ரஜீன் மற்றும் கொன்ஸ்டபிள் கபிலசிறி ஆகியோர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தை அடுத்தே, தேசிய புலனாய்வுப் பணியகத்தினருக்கு இந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், தமக்குத் தகவல் வழங்குபவர்களைச் சந்திப்பதாக இருந்தாலும், உயரதிகாரிகளுக்கு அறிவித்து உரிய அனுமதியைப் பெற்ற பின்னரே அவர்களைச் சந்திக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

மின்னேரியாவிலுள்ள கிழக்கு இராணுவத் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிராந்திய பிரிகேட் தளபதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொட இந்த உத்தரவை வழங்கியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில், மட்டக்களப்பு - ஊரணி பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இருவரும், இராணுவ சாரதி ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின்போது, புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கும் ஒருவரே இவர்களை அந்தப் பகுதிக்கு வருமாறு அழைத்திருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால்தான் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வெளியே செல்வதற்கு முன்னர் அனுமதிபெறவும் - நடமாட்டங்களை மட்டுப்படுத்துமாறும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## போரை தொடங்க...

நகர்ந்தனர். பேரணியின் இறுதிப் பகுதி நகரமுடியாமல் சனத்திரளால் நிறைந்து காணப்பட்டது.

தலைவரே! இதற்குமேலும் பொறுப்பதா?

தலைவரே! தமிழரின் தலைவிதியைத் தீர்மானியுங்கள்.

கிழக்கு போர் எழுச்சிக்குழுத் தலைவர் வே.ஜெயபாலகிருஷ்ணன் - தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜரை மக்கள் முன்னிலையில் வாசித்த பின்னர், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் கட்டளைத் தளபதி கலாத்தனிடம் (சலீம்) கையளித்தார்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் கணினிப் பகுதியில்
பணியாற்றும் **தம்பிராசா கஜேந்திரன்**
அவர்களின் தாயார்
**திருமதி அன்னமுத்து தம்பிராசா**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது ஈழநாடு

# மரண அறிவித்தல்கள்

## முத்துத்தம்பி கனகரட்ணம்

[முன்னைநாள் இலங்கை வங்கி காசாளர், யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி கனகரட்ணம் நேற்று அவர்கள் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2005) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*ஐயனார் கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (இ)

தகவல்:-
குடும்பத்தினர்.

## திருமதி அன்னமுத்து தம்பிராசா



தையிட்டி தெற்கு காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி அன்னமுத்து தம்பிராசா அவர்கள் 18.07.2005 அன்று அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் செல்லப்பா தம்பிராசா (ஓய்வு

நகர்ந்தனர். பேரணியின் இறுதிப் பகுதி நகரமுடியாமல் சனத்திரளால் நிறைந்து காணப்பட்டது.

தலைவரே! இதற்குமேலும் பொறுப்பதா?

தலைவரே! தமிழரின் தலைவிதியைத் தீர்மானியுங்கள்.

ஆணையிடுங்கள் தலைவரே! அடி தொடங்கட்டும்.

தமிழீழம் எங்கும் போர் முழக்கம் முழங்கட்டும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். இனி தமிழர்களின் தாயகம் தமிழீழத் தாயகம் -

போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை பேரணியில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர்.

தாளையடி பொதுவிளையாட்டு மைதானத்தை பேரணி வந்தடைந்ததும் முள்ளியான் கிராம எழுச்சிக்குழுத் தலைவர் எஸ்.முத்துராசா தலைமையில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் - வடமராட்சி கிழக்கு போர் எழுச்சிக்குழுத் தலைவர் வே.ஜெயபாலகிருஷ்ணன் - தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜரை மக்கள் முன்னிலையில் வாசித்த பின்னர், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் கட்டளைத் தளபதி கலாத்தனிடம் (சலீம்) கையளித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் -

தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி ஊடாக இந்த மகஜர் உடனடியாக தேசியத் தலைவருக்கு அனுப்பப்பட்டு அதற்கான பதில் கூடிய விரைவில் அறிவிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இந்தப் பேரணியில் - கேவில், கட்டைக்காடு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மரு தங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை, குடாரப்பு ஆகிய கிராமங்கள் உட்பட வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

(21, 14)


# மெகா புலமைப்பரிசில் பரீட்சை அறிவித்தல்

10-07-2005 ஞாயிறு அன்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பதிவுகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே உள்ளதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ASIAN COMPUTERS**

♦ யாழ்ப்பாணம் ♦ சுன்னாகம் ♦ சாவகச்சேரி
♦ நெல்லியடி ♦ கிளிநொச்சி (கணினியியல் கல்லூரி)


றிக்கொண்டு - சிங்கள தேசம் தமிழ மக்களை நசுக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றதென்றும் -

தொடர்ந்தும் அமைதிவழிப் போராட்டங்களை நடத்தி எதிர்ப்புத் தெரிவிப்பதை சிங்கள தேசம் கருத்தில் எடுக்காததால் உடனே போரைத் தொடங்க வேண்டுமென்றும் பலர் வலியுறுத்தினர்.

தமிழ்மக்கள் மீதும் போராளிகள் மீதும் தொடர்ச்சியான போர் நெருக்கடி சுமத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இனிமேலும் பொறுத்திருப்பதில் பயனில்லை என்றும் -

போரைத் திணிக்கும் சிங்கள தேசத்துக்கு போர் மூலமே பதில் கொடுக்க வேண்டுமென்றும் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்திப் பலரும் உரையாற்றினர்.

அத்துடன், தமிழ்மக்கள் மீது போரைத் திணிக்கவே சிங்களதேசம் முனைவதால் - தமிழ்மக்கள் தமது உரிமைகளைத் தாமே பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்ற செய்தியை சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறும் வகையில் அடுத்த மாதம் முதல் வாரத்துக்குள் யாழ். மாவட்டத்தில் பிரமாண்டமான எழுச்சிப் பேரணியொன்றை நடத்துவதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கு - கிழக்கிலுள்ள பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து, இந்த மாத இறுதிக்குள் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் மாநாடு ஒன்றும் நடத்துவதெனவும் -

தற்போதைய அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் அராஜகப்போக்கை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் பிரமாண்டமானதாக இந்த மாநாட்டை நடத்துவதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## திருமதி அன்னமுத்து தம்பிராசா



தையிட்டி தெற்கு காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி அன்னமுத்து தம்பிராசா அவர்கள் 18.07.2005 அன்று அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லப்பா தம்பிராசா (ஓய்வு பெற்ற லிகிதர் S.T.) அவர்களின் அன்பு மனைவியும், ரூபினி (ஆசிரியை), ஜீவினி (அசிரியை), ஜெயகரன் (கிராம சேவகர்), கரிகாலன் (லிபியா), சரளா, கஜேந்திரன் (கோபு), தயாகரன் (பாபு, மணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராசா, இரகுநாதன், அஞ்சலாதேவி, இராமச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், செல்வபூரணம், சரஸ்வதி மற்றும் செல்வராசா, செல்வரத்தினம், தெய்வநாயகி ஆகியோரின் சகோதரியுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2005) மாலை 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை வட்டுக்கோட்டை வழுக்கியாறு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**த.முகவரி -**
*புளியடி, தாவழை சனசமூக நிலையமருகில்,*
*வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.*

(1989)

**தகவல்:-**
செ.தம்பிராசா
(கணவர்)

## கந்தையா பாலசுப்பிரமணியம்

*(வட்டுக்கோட்டை)*

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் 16.07.2005 இல் மலேசியாவில் காலமானார்.

அன்னார் சோதார் அவர்களின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற யாழ்.வர்த்தக வங்கி), தருமலிங்கம் (ஓய்வுபெற்ற இ.பெ.கூ.தாபனம்), பத்மநாதன் (சீமெந்து கூட்டுத்தாபனம்), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் (C.E.B.), ஞானமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் கோலாலம்பூரில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணகை அம்மன் ஒழுங்கை,*
*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.*

**தகவல்:-**
க.பாலச்சந்திரன் (சகோதரன்)

இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.